முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 27—4—56 வெள்ளி | ஒலி 4

குறளோவியம்.

சேனை தலையாக்கிச் செங்குருதி நீர் தேக்கி ஆனை மிதிக்கும் அருஞ் சேரும் போர்க் களத்தில் எதிரிகளின் முடி நடுவதற்கு முரசம் ஆர்த்துவிட்டது. அழைப்பு வந்துவிட்டது அந்த வீரனுக்கு!

படை முழக்கம் பாராய் கண்ணே— தடையின்றி விடை தாராய் பெண்ணே— என வேண்டுகிறான், விழுப்புண் படாத நாளெல்லாம் வீணான நாட்கள் எனக் கருதும் வீரமகன். விழிப் பண்பாடும் வடிவழகி, முத்துநகை சிந்துகின்ற இதழ் குவித்து முத்தமீந்து, வெற்றியோடு திரும்பிடுக அத்தான் என்று அணைத்து நின்றாள் — அவனுக்குத் தெரியாமல் கண்ணீரை அவன் தோளில் துடைத்துக் கொண்டு!

வேலெடுத்து வா என்பான் — விழி தருவாள். ரத்தம் படிந்த வாள் எங்கே எனக் கேட்பான். செவ்விதழ் கொடுப்பாள். "அக்களமில்லை பெண்ணே இக்களம்! இணைபிரியா எந்தன் துணையே! தலைவனவன் தயாராய் நின்றிருப்பான் எனை நோக்கி! வேல் தருவாய்! விடை தருவாய்; இடையில்லாப் பேரழகே!" என மடை திறந்த காதல் வெள்ளம் விட்டு மறவனவன் நடக்கலுற்றான் மாவீரர் அணிவகுப்பின் பக்கம்!

வழியில் தாய் கண்டாள், வாழ்த்தினாள். வருக புலியே வெற்றியோடு என்றாள். தலைவனவன் உன்மீது சிறு கோபம் கொண்ட சேதி நானறிவேன. நீ மறைத்தால் தெரியாமல் போகுமா தம்பி! தாயகத்தின் மேன்மைக்குத் தலை கொடுக்கச் செல்லுகின்ற படை வரிசை காத்திருக்கும்—கடமை செய்து வா என் கண்ணே என்று முன்பவன் மார்பிலே பெற்றிருந்த புண் மீது முத்தமிட்டாள்.

போருக்குச் சென்ற வீரன் எதிரிகளைப் பொடி செய்து எலும்புப் புழுதியிலே சேர்த்து விட்டான். இரத்தச் சகதியிலே இரு தரப்பு வீரர்களும் இறுதியாத்திரைக்குச் சித்தமானார். கடைசி வெற்றி பகைவருக்கு என்றோர் சேதி பறந்து வர "கண்ணிருந்தும் குருடரா நாம்?" எனக் கேட்டபடி களத்தினிலே நம் காளை சுழற் காற்றாய்ப் பறந்து சென்றான். தனியொருவன் — தலைவனவன் கண்ணெதிரே பகைப்படையின் பலமழித்தான், தோல்விப் புகைப்படலம் ஒழித்து நின்றான். வெற்றிக்கு வித்திட்டான். வீணர் பிணம் குவித்திட்டான், அம்மவோ; இறுதியிலே மறைந்து வந்த அம்புக்கு இரையானான்.

வெற்றி கண்ட படைத்தலைவன், வீரன் சாய்ந்து விட்ட காட்சிதனைக் கண்டு கதறி விட்டான்.

சிறியோர் சேட்டை விளைந்த சிறு கசப்பால் கருத்தினிலே வேறுபாடு கொண்டிருந்த காவலனும், களம்பட்டு வீழ்ந்திருக்த காளைதனை கண்ணீரால் குளிப்பாட்டுகின்றான்.

சாகின்ற வீரன் சொல்வான்;

"தலைவ! தமைக்காத்த தலைவன் கண்களில் நீர்பெருக் கெடுக்குமாறு ஏற்படுகின்ற இதுபோன்ற நற்சாவு களை—வீரர்கள் யாசித்தாவது பெறுதல் வேண்டும்."

தலைவன் தன் சாவு கண்டு கண்ணீர் விடுவது வீரனுக்கு அவ்வளவு பெருமையாக இருக்கிறது. தலைவனுக்கு கண்ணீரை வரவழைத்த அந்த வீரச் சாவு பாராட்டுக்குரியது. அதற்கு இதோ குறள்:

"புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு இரந்துகோள் தக்கது உடைத்து."

கருணா

★ எதற்கும் உதவாத எண்பது கோடி! ★

கொடுமைக்கு ஆளானோர் குமுறிக் கிடந்த 16-ம் நூற்றுண்டில்தான், தொழிற்துறையிலே புதிய, நவீன சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆடை நெய்வதற்கு 'விசைநாடா' என்ற புதிய யந்திரம் ஒன்றை 'கே' என்பவன் கண்டுபிடித்தான். அதற்குமுன் நெசவாளி தன் கையிலிருக்கும் நூலை பாவுக்குள் மெள்ளமாகக் கோர்த்து வாங்கவேண்டியிருந்தது. அது சிரமத்தோடு மட்டுமல்லாமல் உழைப்பிற்கேற்ற பலனை நெசவாளி பெறமுடியாத அளவிற்கு கால தாமதமும் ஏற்பட்டது. இந்த நிலமைகளைக் கடந்து, அறிவியல் பெற்றுதந்த புதிய சாதனங்கள், அங்கெல்லாம் வளர்ந்து மனித உழைப்பைக் குறைத்து, உலக மார்க்கெட்டையே எட்டிப் பிடிக்கின்ற அளவிற்கு பொருள் உற்பத்தி பெருகிற்று என்றெல்லாம் படிக்கிறோம். அந்த நாடுகளும் பொருளாதாரத் துறையில் பெருக்கம் காண யந்திர சாதனங்களைக் காலத்திற்கேற்ற முறையிலே பயன்படுத்தி செல்வத்தைப் பெருக்கின என்று அறிகிறோம்.

ஆனால், இந்தியத் துணைக்கண்டத்து அரசியலாரோ — பயனில்லாத துறைகளிலே பெரும் பணத்தை விரையமாக்கும் 'திருப்பணி'களில் அரசுக் கட்டில் ஏறிய நாள்முதல் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

தொழிற்துரை நிபுணர்களால் பயனற்றத் திட்டம் என்று ஒதுக்கப்பட்ட 'அம்பர் கைராட்டை'யைப் பற்றி இன்று மத்திய சர்க்கார் அமைச்சர்களிடையே, மக்கள் குழப்பமடைகின்ற அளவிற்கு கருத்து வேறுபாடுகள் எழுந்திருக்கின்றன!

மத்திய சர்க்காரின் திறமை வற்றிப்போன நிர்வாகத்தின் விளைவாக ஏற்பட்டுள்ள பல இழப்புகளோடு இந்த 'அம்பர் கைராட்டை'க்காக, சர்க்கார் செலவிட இருக்கும் பெருந்தொகையும் ஒன்ருகும் என்ற கருத்து அரசியல் வட்டாரத்திலே எழுந்திருக்கும் இந்த நேரத்தில், இது குறித்து நிதியமைச்சர் தேஷ்முக்கிற்கும் திட்ட அமைச்சர் குல்சாரிலால் நந்தாவிற்கும் பலத்த சொற்போர் நடந்து வருகிறது.

பொது மேடைகளிலே முரண்பட்ட கருத்துக்களை தெரிவிக்க வேண்டிய அளவிற்கு 'அம்பர் கைராட்டை' அமைச்சர்களைக் கொண்டு வந்து நிறுத்தியிருப்பதில் ஆச்சரியமில்லைதான்.

பொருளாதார— நிபுணர்களால் பயனற்ற திட்டம் என்று ஒதுக்கி விடப்பட்ட அம்பர் கைராட்டை, அனுபவமிக்க தொழிலதிபர்களால், செயல்படுத்தி வெற்றி காண முடியாத வெறும் கற்பனை என்று புறக்கணிக்கப்பட்ட அம்பர் கைராட்டை-பல லட்சம்வேலை இல்லாதோரின் விழி நீரைத் துடைக்க வழி வகுக்கும் என்று நந்தா போன்ரோர் கூறுவதும் அதற்கென இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் 80 கோடி ரூபாய் பெருந் தொகையை விரைய மாக்க இருப்பதும், மத்திய சர்க்காரின், நிர்வாகத் திறமையின்மைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும், என்ற கருத்தை நிதியமைச்சர் தேஷ்முக் தெரிவித்துள்ளார்.

''குறிப்பிட்ட சில பொருள்களை மட்டும் உற்பத்தி செய்வதற்கு இவ்வளவு பெருந் தொகைகளை அளிப்பது நாட்டின் உண்மையான நலன்களுக்கு உதவி செய்யக் கூடியதா என்பதைக் குறித்து என்னைப் போன்ற பொருளாதார நோக்குடையவர்கள் ஐயப்படுகிருர்கள்'' என்று குறிப்பிட்டிருக்கிருர் தேஷ்முக்.

செயல்படுத்தி வெற்றிகாண முடியாத — பயனற்ற திட்டம் அம்பர் கைராட்டை, அதற்காக இவ்வளவு பெருந்தொகை விரையமாக்கப்படுவது நாட்டின் நலனுக்கு உதவி செய்ததாகாது!

நிதியமைச்சர் மட்டுமல்ல — பொருளாதாரத் துறையில் அனுபவம்மிக்க பல அரசியல் அறிஞர்களின் ஒருமித்த முடிவு இது!

என்ருலும், பிடிவாதம் வெற்றி பெற வேண்டும் என்ற காரணத்தால் ·80 கோடி பெருந்தொகை பாலைவனத்து மணலிலே வீசப்படுவதைக்குறித்து நந்தா போன்றவர்கள் கவலைப்படுவதாகத் தெரியவில்லை!

ஆலையின் சங்கே நீ ஊதாயோ! என்ற குரல், உலக நாடுகளில் எழுப்பப்பட்டு வரும் இந்த நேரத்தில்—

அம்பர் கைராட்டை என்ற உறுப்படாத் திட்டத்திற்கு இங்கே உப்பரிகை அமைத்துத்தர முயல்வது பரிதாபத்திற்குரியது மட்டுமென்ருல் நாம் கவலைப்படவேண்டிய அவசியமில்லைதான். ஆனல், அந்த 'சிலரின்' பிடிவாதத்தால், 'யார்வீட்டு' வரிப்பணம் பாழாக்கப் படுகிறது என்பதை நினைக்கும்போது கண்டனங்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அமைச்சர் அவையிலேயே, கருத்து வேறுபாடுகளை உறுவாக்கியிருக்கும் இந்தத் திட்டம்; செயல்பட வேண்டிய அவசியத்திற்குக் காரணம் காட்டுகிருர் நந்தா — அது கேலிக்குரியதாக இருப்பாதோடு மட்டுமல்ல,! இத்தகைய 'சாதாரணங்கள்' ஏனே பொருளாதாரத் துரையில் தலையிட்டுக் குழப்புகின்றன என்ற கவலையும் நமக்கு ஏற்படுகிறது.

''இந்தியாவின் தற்கால நிலமையில் பொருளியல் விதிகளுக்கு இடமில்லை!''

கூறுகிருர் ஒரு பொருப்புள்ளவர்! காமராசர் போன்ற பல மாநில முதல்வர்களின் 'மூக்கணங்கயிற்றை' இழுத்து வைத்திருக்கும் 'மத்திய கொலு'விலே இடம் பெற்றுள்ள நந்தா!

பொருளியல் விதிகளுக்கு முரண்பட்ட விதத்திலே 'பொருளாதார' திட்டங்கள் வகுப்பது எந்த ஜனநாயகத்தின்பாற் பட்டதோ நமக்குத் தெரியவில்லை!

பொருளாதாரத்திற்குப் 'புறம்பானவை'கள்தான் நடைமுறையாக்கப் பட வெண்டும், என்ற விசித்திர யோசனை எந்த அரசியல் ஞானத்தை அடிப்படையாகக் கொண்டதோ என்ற வியப்பு, பொருளாதார ஏடுகளைப் புரட்டிப் பார்த்தோருக்கு ஏற்படுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை!

பயனற்ற ஒரு திட்டம்! 80 கோடி பெருந்தொகை வீண் விரையம்!

ஒரு சிலரின் பிடிவாதத்திற்காக மக்களின் வரிப்பணம் ஐந்தாண்டுத்திட்டம் என்ற பெயரால் கரியாக்கப்படுவது நியாயமல்ல!

இந்த திட்டம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிவிடும் என்று எண்ணுவது வெறும் மனக்கோட்டை!

இப்படியெல்லாம், பொருளாதார நிபுணர்களாலும், நிதியமைச்சர் தேஷ்முக் போன்றவர்களாலும் எடுத்துக் கூறப்பட்ட கருத்துக்கள் சர்க்காரின் செவிகளைத் தொடும் என்று நாம் எதிர்பார்க்க முடியாதுதான்!

'ஊழல்'களின் பிறப்பிடமான மத்திய சர்க்கார், தங்கள் 'திறமை யின்மைக்கு' சான்ருக்கிக் கொள்ளும் மற்ரொரு திட்டம் தான் அம்பர் கைராட்டை!

மக்களின் வரிப் பணமான 80 கோடி நந்தா போன்றவர்களின் பிடிவாதத்திற்கு முன் சிறு துளியாக தோற்றமளிக்கிறது!

நெசவாளரின் கண்ணீரைத் துடைக்கும் திட்டமாம்—காகிதத்தில் எழுதி அழகு பார்க்கிருர் நந்தா!

விஷயம் தெரிந்தவர்களோ விலா நோகச் சிரிக்கிருர்கள்!

உலக நாடுகள்—21ம் நூற்ருண்டு எப்போது வரும் என எதிர்பார்க்கிறது; இங்கிருப்பவர்களோ, 16ம் நூற்ருண்டிற்கு திரும்பிக் கொண்டிருக்கின்றனர் 'அம்பர் கைராட்டை'களை அரியணை ஏற்றுவதன் மூலம்!

செலவிற்கு ஏற்ற பயனைக் கூடத் தராது அம்பர்கைராட்டை! நிதியமைச்சர் கூறுகிருர்!

நிதியமைச்சர் தவருன பொருளியல் ஞானம் கொண்டவர் என்று சுட்டிக் காட்டியிருக்கிருர் நந்தா! இந்த மத்திய சர்க்கார் அமைச்சரவையின் 'அடிதடி' சண்டையைவேடிக்கையாக அதே நேரத்தில் வேதனை பீறிடும் நெஞ்சத்தோடு நாடு கவனித்துக் கொண்டிருக்கிறது.

நாடு ஒருசில அமைச்சர்களின் நிலையற்ற முடிவுகளுக்குக் கட்டுப் பட்டிருப்பது — உண்மையிலேயே கவலைக்குரிய சம்பவமாகும்!

★

வெட்கக்கேடு!

இது சோஷலிச பாணி—இங்கே லாப வேட்டைக்காரர்களுக்கு இடமில்லை; பாட்டாளிகளின் நலன்தான் எங்கள் நலன்!

—என்று பறை முழக்கினர் பண்டித நேரு!

அவரது ஆட்சியின் கீழே அமாவாசைக்கு விடுமுறையுண்டு; கிரகணத்துக்கு உண்டு; மற்றும் கீழ்த்தர உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் பண்டிகைகள் அனைத்திற்கும் விடுமுறை உண்டு!

ஆனல் பாட்டாளி மக்களின் திருநாளாகிய மே நாள் அன்று அவர்களுக்கு விடுமுறை கிடையாது; தொழிற்சாலையிலே சிறைப்பட்டுக் கிடக்கவேண்டும்!

'சோஷலிச பாணி' வழங்கும் இந்த நாட்டிலே மே தினத்துக்கு அரசாங்க ரீதியாக மதிப்பு கிடையாது!

ஆனல் இலங்கைத் தீவில் அப்படியல்ல; மே நாள் விடுமுறை தினமென்று அறிவித்துவிட்டார், பண்டார நாயகா!

தன்னை ஒரு சோஷலிஸ்ட் என்று சொல்லிக்கொள்ளும் பண்டிதர் வெட்கித் தலைகுனிந்து கொள்ளட்டும்!

பண்டாரா நாயகாவின் செயல் நேருப் பண்டிதரை வெறும் வாய் வீச்சுக்காரர் என்பதை உலகுக்கு அறிவிக்கட்டும்!

வெட்கம்! வெட்கம்!! சோஷலிச பாணியாம்! ஆனல் இங்கே மே நாள் அன்று பாட்டாளிக்கு விடுமுறை கிடையாதாம்! இதைவிட வேறு வெட்கக்கேடு என்ன இருக்கிறது!

சென்னை 27--4--56 வெள்ளி

விலை ஏறுது, விஷம் போல!

உற்பத்தியைப் பெருக்குவோம்; ஊறு செய்யும் வறுமையை விரட்டுவோம்—என்ற பிரச்சாரத்துடன் ஐந்தாண்டுத் திட்டங்கள் அமுலாகி வரும் இந்த நேரத்திலேதான், அரசாங்கத்தின் அந்த முயற்சிகளையெல்லாம் எள்ளி நகையாடுவதைப் போல விலைவாசிகள் கடந்த சில வாரங்களாக விஷம் போல உயர்ந்து கொண்டு வருவதைக் காண்கிறோம்.

உற்பத்தியைப் பெருக்குவதாகக் கூறுகிறீர்; பெருகுவது தேவையான பண்டங்களுக்குத் தரப்படும் விலையாக அல்லவோ இருக்கிறது என்று ஒவ்வொரு பாமரனும் பாராளும் குணாளர்களைப் பார்த்துக் கண் பூட்டுகிற அளவுக்கு நிலைமை நெருக்கடிக் கட்டத்தை அடைந்து வருவதையும் கண்கூடாகப் பார்க்கிறோம்.

பயிர்கள் அறுவடையாகி சந்தையை நோக்கிப் பொதி பொதியாய் குவியவேண்டிய இந்தவேளையில் கோட்டைவாயிலில் பறக்கும் மூன்று வர்ணக் கொடியைப் போல அன்றாடம் தேவைப்படும் பண்டங்களின் விலையாவும் உச்சியில் ஏறிக்கொண்டிருப்பது ஏழைப் பொதுமக்களின் வயிற்றிலடித்துவிட்டு, அந்த வேதனைக் காட்சியை வேடிக்கை பார்த்துத் தீர வேண்டிய சந்தாப்பத்தை ஆட்சியாளர்களுக்கு உருவாக்கிக் கொடுத்திருக்கிறது.

சென்னை நகரில் முன்பு பத்தணுவுக்குக் கிடைத்து வந்த ஒரு படி அரிசி இப்போது 13-அல்லது 14-அணுக்களாக உயர்ந்திருக்கிறது.

ரூ. 1—10—0, அல்லது ரூ. 1—12—0க்கு வாங்க முடிந்த ஒரு வீசை நல்லெண்ணெயை இப்போது முழுசாக மூன்று ரூபாய்களை கொடுத்தால்தான் பெற முடிகிறது.

மிளகாய் விலையோ மொத்தத்தில் எண்பது சத வீதம் அதிகரித்திருக்கிறது.

அரசினர் தரும் புள்ளி விவரப்படி சென்ற மார்ச் மாதம் 339-ஆக இருந்த 'வாழ்க்கைச் செலவு குறியீட்டு எண்' ஏப்ரல் முதல் வாரத்தில் 349-ஆகவும், இரண்டாவது வாரத்தில் 352-ஆகவும் ஏறியபடி இருக்கிறது. காமராசர் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தீரர் பட்டாளத்தையும், சர்வ கட்சிக் கூட்டணியையும் எவ்வளவு ஆவேசத்தோடும், ஆத்திரத்தோடும் வசை மாரி பொழிகிறாரோ அந்த அளவுக் காணவேகமும், ஓட்டமும், நிலையற்ற போக்கும் விலைவாசிகளிலேதான் காணப்படுகிறது.

இந்திய அரசினரின் வரி விதிப்புக் கொள்கையும், போலிப் பணப் புழக்கமும் இந்த விலை உயர்வுக்குக் காரணமாயிருக்குமா-என்றால், 'அப்படி அல்ல' என்று, அழுத்தந்திருத்தமாக பதில் சொல்கிறார், நிதி அமைச்சர் தேஷ்முக்.

பின் எதுதான் காரணம்? விஷம்போல் விலை உயர்ந்திருப்பதை எந்த சக்திதான் ஊக்குவித்திருக்கிறது?

காமராசர் குறிப்பிடுகிறார், வியாபாரிகள் சரக்குகளை அளவுக்கு மீறி பதுக்கி வைத்திருப்பதுதான் முக்கியமான காரணமென்று! நம் மாநிலத்து வியாபார முதலைகள் மட்டுமல்ல; வெளி மாநிலத்து லாப வேட்டைக்காரர்களும் இந்தப் பதுக்கல் விவகாரத்தில் தங்கள் பங்கினைச் செலுத்தியிருக்கிறார்களாம்!

இதை முன்னமேயே தடுத்து நிறுத்துவதற்குத் திறமையற்ற இந்த அரசாங்கம் இப்போதுதான் வெட்கமின்றி காரணங்களை ஆராய முற்பட்டிருக்கிறது!

வேடிக்கைக் கதையொன்று சொல்வார்கள்-மருத்துவ விடுதியில் நோயாளியைச் சேர்த்துவிட்டு நல்ல முடிவுக்காக ஆர்வத்தோடு காத்துக்கொண்டிருப்பவரை நோக்கி, டாக்டர் கூறினாராம், "ஆபரேஷன் வெற்றிதான்: ஆனால் வியாதியஸ்தர் பிழைக்கமாட்டார்" என்று! அதைப்போலத்தான் இருக்கிறது, சிறிதும் அதிர்ச்சியின்றி காமராசர் விலைவாசிகளின் போக்கை விமர்சிக்கும் வேடிக்கைக் காட்சியும்!

முன்பொருமுறை ஸ்விட்சர்லந்து நாட்டிலே பால் விலை 'பாயிண்'டிற்கு சுமார் அரையணு அளவிற்கு அதிகரித்துவிட்டபோது அங்கே பதவியிலிருந்த அமைச்சர்கள் காமராசரைப்போலவோ, அல்லது நிதிக்கு அமைச்சராகி, மதிக்கு அமைச்சராக மறந்து பிதற்றிக்கொண்டிருக்கும் சுப்ரமணியத்தைப் போலவோ பேலிச் சமாதானங்கள் கூறிக்கொண்டு, எதிர்க்கட்சிக்காரர்கள்மீது காலாந்தர நடையிலே தாக்குதல் தொடுக்கவில்லை.

அவசர அவசரமாக அமைச்சரவை கூட்டப்பட்டு, கூடிவரும் பால் விலைக்கு முட்டுக்கட்டை போட்டு நிறுத்தினார்கள்!

இது அங்கே; ஸ்விட்சர்லாந்து நாட்டில்!

'அப்படியானால் இங்கும் அதைப்போல ஏன் செய்ய முடியவில்லை?'

—விலையேற்றத்தால் தலையைத்தொங்கவிட்டுக் கொண்டு, கண்ணீர் விட்டுக் கதறும் செந்தமிழ் நாட்டுக்குடும்பத்தலைவன் ஒவ்வொருவன் இதயத்திலும் இந்தக் கேள்வி எழலாம்.

அதற்கு: சென்ற கிழமை காமராசரை பத்திரிகை நிருபர்கள் பேட்டிகண்டு, செய்தியை விவரித்தபோது, 'சுதேசமித்திரன்' 19-4-56ந் தேதி இதழில் பதில் கூறியிருப்பதைப் படியுங்கள்:

"விலைவாசி உயர்வைத் தடுக்க நேரடியாக நடவடிக்கை எடுக்க இப்பொழுது ராஜ்ய சர்க்காருக்கு போதிய அதிகாரமில்லை என்று அதிகாரிகளை விசாரித்ததில் தெரிய வருகிறது"—உடனடியாக விலைவாசிகளின் உயர்வைத் தடுப்பதற்கு சென்னை அரசாங்கத்துக்கு அதிகாரமில்லையாம்—தலைகுனிந்தபடி விளக்கம் தருகிறது 'சுதேசமித்திரன்'

ஸ்விட்சர்லந்து நாட்டில் பால் விலை ஏறியதும் மின்னல் வேகத்தில் மந்திரி சபையைக் கூட்டி நாட்டு மக்களின் இன்னல் அகற்றியதைப்போல இங்கு செய்ய முடியாதாம்!

என்?

அதிகாரமில்லை, சென்னை அரசாங்கத்திற்கு!

தென்னந்தோட்டமும், கன்னற் காடும் சூழ்ந்த வானுயர் வீடு தீப்பற்றி எரிகிறது. ஆனால் அந்த நெருப்பின் நாக்குகளை வீட்டுக்காரனால் அணைக்கமுடியவில்லை; காரணம் அவனுக்கு அதிகாரமில்லையாம்!

தேவரும் மூவரும் அறிய தெய்வமாது நிகர் தேன்மொழியொருத்தியைத் தாலிகட்டியிருக்கிறான் ஒருவன்! அவளை அடுத்த வீட்டுக்காரன் கட்டிலறைக்கு வாடி என்று கையைப் பிடித்திழுக்கிறான். அதைப் பார்த்து நிற்கின்ற பர்த்தா, புலியாக மாறி உறுமத்தான் முடிகிறதேதவிர, உடன் பாய்ந்து சென்று அந்த நயவஞ்சகப் பேயின் கழுத்தை ஒடித்தெறிய முடியவில்லை. காரணம் அவனுக்கு அதிகாரமில்லை! அந்த நிலைக்குத்தான் முதலமைச்சர் காமராசரும் அவரது குழுவினரும் கொண்டுவரப்பட்டிருக்கின்றனர்!

சின்னஞ் சிறிய ஸ்விட்சர்லந்து—நம் மாநிலத்தை விட பல மடங்கு சிறியது—கடிகாரத் தொழிலை நம்பியே வாழ்க்கை நடத்துவது—அந்த நாட்டு முதலமைச்சருக்கு இருக்கும் அதிகாரம் கூட இங்குள்ள காமராசருக்கு இல்லை!

வீரசுதந்திரம் வேண்டிப் பெற்றோர் கோர நிலைமையால் குடிமக்கள் தேம்பி அழுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு அதிகாரமில்லை!

—தன்மானம் பிடுங்கித்தின்கிறது, ஆளவந்தாரின் கதியை நினைக்கும்போது!

வடக்கு ஆளுகிறது; தெற்கு அடி பணிகிறது.

வடக்கு நுகத்தடியைத் தூக்கிப் பிடிக்கிறது; தெற்கு அதிலே கழுத்தைக் கொடுக்கிறது.

வடக்கு கடிவாளத்தை நீட்டுகிறது; தெற்கு வாயைத் திறக்கிறது.

—என்று நாம் மேடை தோறும், ஏடு தோறும் இடித்துக் கூறிய போதெல்லாம், நம்மைக் கடித்து விழுவதைப் போல பாய்ந்த தேசியத் தோழர்களே! தென்னகத்தின் கைகள் தன்னையே காத்துக் கொள்ள முடியாத அளவுக்குக் கட்டிப் போடப்பட்டிருப்பதை எண்ணிப் பாருங்கள்; இந்த இழிதகை நிலையை எண்ணி யெண்ணி இடி கேட்ட நாகம்போல நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகுங்கள்!

இப்போது அதிகாரமில்லையாம்—எழுதுகிறது; சுதேசமித்திரன்!

பின் எப்போதுதான் அதிகாரம் கிடைக்கும்? 'மித்திரன்' இதற்கு பதில் சொல்லவில்லை. ஆனால் நாம் சொல்ல முடியும்; வடவர் செய்யும் கேடு களையப்படும்போது - நம்நாடு நமதாகும்போது என்று!

அப்போதுதான் சென்னை 'ஸ்விட்சர்லாந்து' ஆகும்; அப்போதுதான் நம்மை நாமே ஆண்டு கொள்ள அதிகாரம் கிடைக்கும்! ஃ

இலக்கியத்தில் நாம்

நித்திலமணிக் கூரை வேய்ந்த நீல வானம்! சித்திரக் கோலமோ? பத்தரைமாற்றுத் தங்கத்தின் வட்ட ஒளி வார்ப்படமோ? என்றெண்ணும்படி, அந்தக் கூறையின் உச்சியிலே, குங்கும ஒளி பொழிந்து, எழில் சேர்த்துக் கொண்டிருந்தது அழகு நிலா! இந்த அழகொழுகும் காட்சி கண்டார்—சுந்தரத் தமிழ் பாடும் அக் கவிஞர்; கண்டாரா—இல்லை; இல் லை; இயற்கைத் தீட்டிக் காட்டும் அந்த எழிலோவியத்தின் குளிர்ச்சியிலே உடம்பெல்லாம்—உயிரெல்லாம் நனைந்து நின்றார்! அந்த நிலவின் ஒளியிலே இதழ் விரித்து, இளம்பனி தேக்கி, பூத்துச் சிரிக்கும் முல்லை மலர்க் கொத்தெல்லாம், முத்தின் ஒளி பெற்று முறுவலித்து நின்றன. பொதிகைமலைத் தென்றல் அப் பூக்காட்டின் இதயத்தைத் தடவி புதுமணம் தூக்கிச் சென்றது!

கற்பனை முறுக்கேறிய நரம்பில் — கட்டழகி ஒருத்தியின் காந்தள் விரல்கள் பட்டது போல்—சாகாத தமிழ்க் கவிதை நெய்யும் அப் புலவரின் எண்ணக் கபாடம் முடிமுடித் திறந்தன. பூரிப்பால் அவர் சிந்தனைச் சிறகுகள் மேகமண்டலத்தை கிழிப் பறந்தன! மோனநிலை முற்றுபெறாத உணர்ச்சி மாலை, தாகம்—ஆம்; அக் கவிஞருக்கு கலைத் தாகம்! தாபமாக உறுவெடுக்க வழியில்லை; காரணம் அவர் தனிமையில் நிற்கிறார்! எனவேதான் அவர் நினைவலைகளை—உணர்ச்சிக் கொந்தளிப்புகளை வேறு திசை நோக்கி திருப்பிவிட்டார்!

கத்தும் நீரலைகள் கவிபாடும் நெடுங்கடலோரம்; ஓங்கி வளர்ந்திருந்தது ஒரு பெருங் காடு! அந்த காட்டின் நடுவிலே தென்னிலங்கை வேந்தனைப் போல் நிமிர்ந்து நின்ற மலைக் குன்று! அந்த குன்றின் விளிம்பிலே கம்பீரமாக ஏறிநின்றார் கவிஞர்! 'இன்பப்பெருக்கே, இயற்கையின் பேரெழிலே' என்று வண்ணத் தமிழால் தண்ணொளி பெய்துகொண்டிருந்த அழகு நிலவை வாழ்த்தினார்; 'கூகூ'வென்று தேனினுமினிய குரல் எடுத்து குயிற்பேடு ஒன்று கூவிற்று! வானந்தான் பாடிற்றா? வான் நிலவு பாடிற்று? என்ற திகைப்பு தன்னை மறந்து நின்ற அக் கவிஞருக்கு! மீனும் வானம் பார்த்து, மீண்டும் பாடிற்று அந்த மாமரத்துப் பூங்குயில்! அவர் செவியிலே தேன் அருவிப் பாய்ந்தது; சங்கத் தமிழ் என்றும் சாகாமல் வாழ்க வென்று சாற்றுய் நீ கருங் குயிலே! என்று வாய் இனிக்க வாழ்த்தினர் கவிஞர்.

இந்த இன்பச் சூழ்நிலையில் எங்கிருந்தோ ஒரு பேரொலி இமயமும்-விந்தியமும் மோதிச் சிதறுவதைப் போல் கேட்டது! பகைக் குலத்தின் குடல் கிழிக்கும் மறவர் பரம்பரையல்லவா கவிஞர்! எனவே அந்தப் பெருமுழக்கம் கேட்டு, குலை நடுக்கம் கொண்டாரில்லை; மாருக—

எம் கொற்றவன்தான் சினந்தானே — அவன் கோட்டை மதில் நிற்கும் முரசத்தின் பேரொலிதான் முழங்கிற்றோ? என்ற சந்தேகம் வந்துவிட்டது. சுற்றுமுற்றும் பார்த்தார்; அவர் விழிக்கோணம் அந்த குன்றின் சாரலிலே வட்டமிட்டது.

❋

கரும்பாறைகள் நிறைந்திருந்த அக் குன்றின் அடிவாரத்திலே பெரியதொரு வேங்கை!

நெடுமலைபோல் பருத்து நிற்கும் மதங்கொண்ட யானை— அந்த வேங்கைக்கு எதிரே! உயிர் குடிக்கக் காத்து நிற்கும் கூற்றம்போல், ஒன்றை ஒன்று முறைத்துக்கொண்டு நின்றன. சாக்காட்டின் புழுதி மேட்டிலே தலைசாய்க்கப் போவது எதுவோ? மரணத்தின் மடியிலே பிணமாக, குடல் சரிந்து விழப்போவது எதுவோ? அந்த பயங்கர விளையாட்டின் முடிவு அய்யகோ நினைத்திடவும் மனம் வரவில்லை! ரணகளத்தில் நின்றும் மனந்தளரா தமிழ்க் குடிதானே அக் கவிஞர் பெருந்தகை. ஒன்றை ஒன்று பகை முடிக்க காத்து நிற்கும் அந்த வேங்கையையும் யானையையும் பார்க்கும்போது; பீறிட்டு வந்த பெருஞ் சிரிப்பை அடக்கமுடியவில்லை அவரால்! வெங்கலக் குரலெடுத்து உரக்கச் சிரித்தார்!

இன்னும் சில விஞடிகள் தான்—ஊமை முடித்திருப்பதற்குள் இரண்டிலொன்று!

சாவா? வாழ்வா? பெருங் குரல் எடுத்து பிளிறி சினம் மிகுந்து முழக்க மிட்டது அக் களிறு!

நெஞ்சுரம் மிக்க அவ்வேங்கையோ, வேல்வீசி-எதிர்வேல் நோக்கும் வீரனின் விழிகளைப் போல், அசையாமல் நின்று கொண்டிருந்தது!

ஏனோ அக்கவிஞர் மீண்டும் சிரித்தார். ஓயாமல் சிரித்துக் கொண்டே இருந்தார்.

எங்கிருந்துதான் வந்ததோ அந்த மதம் பிடித்த யானைக்கு அவ்வளவு கோபம்!

கொம்பு நீட்டிப் பாய்ந்தது; வேங்கையின் அடி வயிற்றைக் குத்திக் கிழித்தது. குடல் சரித்தது. அதன் தலையைத் தன் துதிக் கரத்தால் வளைத்து-முறித்து வீசி எறிந்தது, பலம் கொண்ட மட்டும் தன் நெடுங் கால்களால் உதைத்து துவைத்து விட்டது.

"மதங் கொண்ட யானையே மலைத்தேன் குடித்தாயா? மது உண்டு வந்தாயா? ஏன் இப்படி அலைகிறாய்-குடல் கிழித்துக் கொன்று போட்டோம் வேங்கைப்புலி ஒன்றை-என்ற வெற்றி முழக்கமா—போடுகிறாய்! அய்யோ பாவமே!"

என்று கூறி விட்டு மீண்டும் சிரித்தார் கவிஞர்; ஏன் தெரியுமா? அந்த வெறி கொண்ட யானை கிழித்துப் போட்டது வேங்கைப் புலியை அல்ல; வேங்கை மரத்தை!

ஆம்! குன்றின் சரிவிலே பூவிரித்து நின்ற வேங்கை, நிலவின் ஒளியிலே, அந்தமதங்கொண்ட யானைக்கு புலிபோல் தோற்றமளித்தது. வேங்கை மரத்தின் அப்பூ நிறைந்த தோற்றம் புலியின் தோற்றத்தைக் காட்டி அந்த யானையை குலை நடுக்கம் கொள்ளச் செய்து விட்டது. எனவேதான் தன்னை வீணாக அச்சுறுத்திய குற்றத்துக்காக அவ்வேங்கை மரத்தின் அடி பாகத்தை புலியின் வயிறு-என்றெண்ணிக் குத்திக் கிழித்தது. அதன் பூ நிறைந்த கிளையொன்றை வாங்கிப் பிளந்து, தன் சினம் தணித்துக் கொண்டது!

இந்தக் காட்சிதான் அந்தப் புலவரின் சிரிப்புக்கு வித்திட்ட காட்சியாக அமைந்துவிட்டது! இராக் காலத்தில், குன்று சேர நின்ற அவ்வேங்கை மரத்தின் பூ நிறைந்த காட்சியை, புலியென்றெண்ணி, அதன் தலையை வாங்கிப் பிளந்து வெற்றி நடைபோட்ட அந்த யானையின் தோற்றம்—கவிஞரின் கண்களுக்கு முன்னால் மறக்குடி சேர்ந்த தமிழ் வீரன் ஒருவனை கொண்டு வந்து நிறுத்திற்று. பகைக் குலத்தை இடிபோல் மின்னிப் புடைக்கும் தமிழ் வீரன், அந்த யானைக்கு உவமையாக்கப் படுகிறான்!

சின மிகுதியால், வேங்கையின் தலையை 'வாங்கிப் பிளந்த' யானைக்கும்—பகைக் கூட்டத்தின் 'உயிர் வாங்கிக் குடிக்கும்' வீரனுக்கும் வேறுபாடு என்ன இருக்கிறது!

வெற்றி நடைபோடும் அந்த யானையின் தோற்றம்—தண்டேந்திச் செல்லும் போர் மறவனை நினைவிற்கு கொண்டு வந்து நிறுத்துகிறது. காதலும், வீரமும் கைகோர்த்து நின்ற தமிழகத்து மண்ணிலன்றி இந்த உணர்ச்சி மிக்க கற்பனை வேறெந்த மண்டலத்துப் புலவர் நெஞ்சில்ஊற்றெடுக்கமுடியும்? 'பதிற்றுப் பத்தில்' காணக்கிடக்கும் இந்த எழிலோவியத்தின் கவிதை வடிவம் இதோ!

மறப்புலிக் குழூ உக்குரல்
செத்து வயக்களிறு
வரைசேர் பெழுந்த சுடர்வீ
வேங்கைப்
பூவுடைப் பெருஞ்சினை வாங்கிப்
பிளந்து தன்
மாயிருஞ் சென்னி யணிபெற
மிலைச்சிச்
சேஎ ருற்ற செல்படை மறவர்
தண்டுடை வலத்தர் போரெதிர்த்
தாங்கு
வளையமல் வியன்காடு
சிலம்பப் பிளிறும்!

—ஏ. கே. வில்வம்.

2-வது தி. மு. க. மாநில மாநாட்டில்

கடைகள் வைக்க விரும்புவோருக்கு

அறிவிப்பு

மாநில மாநாட்டு செயற்குழு முடிவுப்படி மாநில மாநாட்டின் உள்ளே வைக்கப்படும் கடைகளையும், உணவு விடுதியையும் திருச்சி தோழர் எஸ். ஏ. ஜி. ராபி அவர்களுக்கு மொத்தமாக ஏலம் விடப்பட்டது.

எனவே கடைகள் வேண்டுவோர் எஸ். ஏ. ஜி. ராபி, அல்லிமால் தெரு, திருச்சி என்ற முகவரிக்கு எழுதி பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

எம். எஸ். மணி,
செயலாளர், 2-வது தி. மு. கழக மாநில மாநாடு.

"மானாட, மயிலாட, மங்கை நீ ஆடக் கண்டிருந்த நான் பேயாடும் இரணகளத்திலே போராடும் நேரம் வந்துவிட்டது. முக்கனியும் முத்தமிழும் சுவைத்து, முக்கலையின் வளர்ச்சிக்கு எத்தனையும் தருவோம்—என வக்கணை பேசி வாழ்ந்தோமே; அது வாலறுந்த நரிகளாம் தஞ்சைக் காவலன் **ரகுநாத நாயக்கனுக்கும்**, அவன் தளபதியாம் வாள் பிடிக்கத் தெரியாத வீரன் **கோவிந்த தீட்சதருக்கும்** பிடிக்கவில்லை! போர் தொடுத்திருக்கிறார்கள், புரட்டர்கள்! நான் காமியாம்! கண்டக்கண்ட பெண்களின் கற்பைக் கொள்ளையடிக்கும் கொடியவனாம்!—கதைகட்டி விட்டிருக்கிறார் கோவிந்த தீட்சதர்! குன்று போல அன்னம் குவிந்திருக்கிறது என் எதிரில், குலக்கொடி உன் வடிவில்! அதை விட்டு, எறும்பு கொள்ளும் எச்சில் பண்டத்தைப் போல, கொள்ளிடக் கரையில் குளிக்கவரும் கோமள வல்லிகளை மலர்ச்சோலையில் சந்தித்தேனாம்; சம்மதிக்காதவர்களை சித்திரவதையும் செய்கிறேனாம் — பொய்மையின் எல்லையைத் தாண்டிவிட்டார்கள்; வாய்மைக்கு வாய்க்கரிசி போட்டு அனுப்பிவிட்டார்கள், வல்லூறுபோல நம் பூமியை வளைத்துவிடப் பார்க்கும் வஞ்சகச் செங்கோலினர்! வீரக் குடும்பத்து விளக்குகளே! உங்கள் தினவு கொண்ட தோள்களுக்கு உணவு கிடைத்துவிட்டது...

"கோவிந்த தீட்சதன்-கோபுரம் போல நிமிர்ந்து நிற்கும் தமிழர் குலத்தைக் குட்டிச்சுவராக்கும் கொலைகாரன்; எட்டிக்காய்போல நினைத்து, அவன் தலையை வெட்டியெறியாவிட்டால்—கட்டிக் கரும்பாம் தமிழர் நாகரிகம் பட்ட மரமாகிவிடும். சங்கம் வளர்த்த தமிழை சதிகாரன் ஒருவன் சாய்த்துவிட அனுமதிப்பதா? வங்கம், கலிங்கம், கடாரம் வென்றவன்—ஆடுமாடு மேய்க்க வந்தவனால் பங்கம் பெறுவதா? கூடாது; கூடாது! ஆடாமல் அசையாமல் வாழ்வு தேடும் அந்தணர் கூட்டம், வாடா மலராம் நம் அன்னையின் முடியை அபகரிக்கக்கூடாது. அறவழி நடக்கும் காளைகளே! போர் நாமாகத் தேடிக்கொண்டதல்ல; நம்மீது திணிக்கப்பட்டிருக்கிறது. தீட்சதரின் ஆதிக்கத்தை எதிர்த்தோமாம்; அதற்காக எதிர்க்கிறார்கள், ஆணவக்காரர்கள்! நம்மைப் படுகளத்திலே சந்திக்கப் போகிறவர் சாமான்யமானவரல்ல; தஞ்சை பூபதி — அவர் கையிலே தொகை தொகையாய்ப் பட்டாளம் குவிந்திருக்கிறது. நம் படையோ சாதாரணம். மானவுணர்ச்சியைத் தவிர நம்மிடம் வேறு மூலதனமில்லை. எனவே தற்காப்புக்காகவே போர் செய்யுங்கள்; தறுக்கர்களின் தலை தேங்காய்க் குலைகளைப் போல அறுந்து தரையிலே வீழும்வரை போர் செய்துகொண்டே இருங்கள்!"

—**சோழகன்** என்று பெயர் படைத்த சிங்கம் தன் படை வீரர்களிடம் இப்படிக் கர்ஜனை புரிந்தான். கால்நுனிபட்டுப் பாய்ந்தோடும் பந்தினைப் போல, சோழகன் பேச்சு கேட்டு வீராவேசம் கொண்டு அந்தத் தமிழர் பட்டாளம் புழுதி கிளப்பிப் புறப்பட்டது, கோட்டையைக் காக்க!

தீவுப் பட்டினம்

★

சோழகன் கொள்ளிட நதிக் கரையிலே அமைந்திருக்கும் தீவுப் பட்டினத்துக்கு அதிபதி

தீவுப் பட்டினம் அல்லது தீவுக் கோட்டை என்று அழைக்கப்படும் அந்த நகரமே புதிய பாணியில் அமைந்திருந்தது.

சுற்றிலும் ஆழமான அகழி! கடலைப் போன்ற ஆழமென்பர்; முடியையும் அடியையும் காட்டாமல் ஒளியுருக் கொண்டானே பரமன் அவனால் கூட கடக்க முடியாதென்பர்-அவ்வளவு புகழ் பெற்றதாம், அந்த நீர் அரண்!

அதிலே எண்ணிறந்த முதலைகள் வட்டமிட்டுக் கொண்டிருக்கும். இதில் விநோதம் என்னவென்றால், அந்த முதலைகள் பகுத்தறிவுள்ள பிராணிகளைப் போல நடந்து கொள்வதுதான்! சோழகனின் ஆணைப்படியெல்லாம் நடக்கும் நாய்க் குட்டிகளாகிவிடும், அந்த முதலைகள்! தீவுப் பட்டினத்துக்கு இதைவிட வேறு பாதுகாப்பு என்ன வேண்டும்?

ஆனால் தஞ்சையின் கதை இதனினும் மாறுபட்டது. அங்கே முதலைகள் தண்ணீரிலே நீச்சல் போடவில்லை. தரையிலே எழுந்து நடமாடின; தமிழர் வம்சத்தைத் தரை மட்டமாக்கிவிட தவம் கிடந்தன!

தஞ்சைக் காவலன் ரகுநாத நாயக்கன் பெயருக்குத்தான் மன்னன்; உண்மையில் அவன் குல குரு கோவிந்த தீட்சதருக்குக் கால் பிடிக்கும் அடிமையைப் போல நடந்து கொண்டிருந்தான்!

பேனா ஓவியம்!

(9-ம் பக்கம்)

வேதியரின் ஆணைப் படியே அரசியல் படகு திருப்பப்பட்டு வந்தது. வடமொழி அப்போது மகுடம் புனைந்திருந்தது! அந்தணன் எதிரிகள் அரசாட்சியின் எதிரிகளாகக் கருதப்பட்டார்கள்!

காவிரி மண்டலம் தலைவிரி கோலம் கொண்டிருந்த இந்த நேரத்திலேதான், ஆரியத்தின் எதிரியாக தீவுப் பட்டினத்துச் சோழகன் தோன்றினான்.

அந்த எதிர்ப்புணர்ச்சியை முளையிலேயே கிள்ளிவிட எண்ணினான் கோவிந்த குருக்கள்!

தீட்சதரல்லவா; குள்ள நரிக் குணம் அவர்கள் பரம்பரைச் சொத்தாயிற்றே!

அதன் விளைவுதான் சோழகன் ஆட்சியிலிருந்த சின்னஞ் சிறு தீவுப் பட்டினத்தைச் சுற்றி அபலைப் பெண்களைக் கற்பழித்த போலிக் குற்றச் சாட்டுகளும், தஞ்சைப் பேரரசின் படைகளும் குவிந்தன!

கோவிந்த தீட்சதன் படைத் தலைமை தாங்கிப் புறப்பட்டான்; ஆமாம்; எத்துவேலை எக்காளம் ஊதிப் புறப்பட்டது. நயவஞ்சகம் நல்லவர்களை எதிர்த்து நடை போட்டது! மறைந்து தாக்குவதையும், புற முதுகிலே பாணம் பூட்டுவதையும் தொழிலாகக் கொண்டுவிட்ட புல்லேந்திகளின் தலைவன் வில்லேந்திகளின்விலாப் புறத்தை ஒடித்தெறிய புரவியிலேறிப் புறப்பட்டான்!

தீவுப் பட்டினம் தஞ்சை வீரர்களால் சூழப்பட்டது. மரப் பொந்தினில் கூடுகட்டிக் குஞ்சு பொறித்து, குடித்தனத்தோடு வாழும் பசுமைக்கிளியை வாயில் போட்டுக்கொள்ள பூனைக் குட்டிகள் காத்திருப்பதைப் போல, சோழகனின் சிரம் வாங்கவேதியர் ஆணைப்படி வீரர்கள் காத்திருந்தனர்.

தீவுப் பட்டினம், என்ன சாமான்யமா? சுலபத்தில் பஸ்பமாகும் தன்மைகொண்டதா? அல்லவே; அந்த முதலைகளைக் கடப்பதென்றால் முக்கண்ணனாலும் முடியாதே!

படகுப்பாலம் அமைத்து கடக்க முயன்றனர்; தஞ்சை வீரர்கள்! முடியவில்லை; அடியற்ற மரம் போல அவர்களெல்லாம் முதலைகளின் வயிற்றுக்குள்ளே சாய்ந்தனர்!

இந்தக் காட்சிகளையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த ரகுநாத நாயக்கன் கண்கள் சிவப்பேற தீட்சதரைப் பார்த்தான்.

"குருநாதா! நம் வீரர்கள் சவங்களாகச் சாய்ந்து விழுவதைத் தடுக்க முடியாதா? உங்கள் தவ வலிமையால் அதற்கொரு ஏற்பாடு செய்ய முடியாதா?"

—தீட்சதர் மூக்கின்மேல் விரல் வைத்தார்.

"ரகுநாதா! ஆண்டவனை அழைத்தால்தான் படமெடுத்தாடும் இந்தப் பாம்புக்குட்டியை

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

2

அவளுக்குத் திருமணம் நிச்சயமாகி விட்டது. பெங்களூரிலிருந்து பெண்வீடு பார்க்க வரப் போகிறார்கள். அதவும் ஒரு முறைக்காகத்தான். மற்றபடி பேசவேண்டியவைகள் எல்லாம் முன்கூட்டியே பேசப்பட்டு—மணமகன் படத்தை மணமகளும்—மணமகள் படத்தை மணமகனும்

பார்த்துத் தங்கள் விருப்பத்தை வெளியிட்டு விட்டார்கள். அடுத்த மாதம் திருமணத்திற்கு நாள் குறிக்க வேண்டியதுதான் பாக்கி... அதற்குள் சம்பிரதாயப்படி பெண்வீடு, பிள்ளைவீடு பார்த்தாக வேண்டுமே — பிள்ளைவீடு பார்த்தாகி விட்டது.

பெங்களூர் மாப்பிள்ளை மிகப் பெரிய இடம். ஏராளமான சொத்துக்கு அதிபதி. எடுபிடி ஆள் அம்புகள் தேவைக்குமேல் உண்டு. ஏழெட்டு வீடுகள்; ஏறத்தாழ அரண்மனை மாதிரி! இத்தனைக்கும் அவன் ஒருவனே சொந்தக்காரன். வீட்டுக்கு ஒரே பிள்ளை. வயதான விதவைத் தாயார். பையன் பெயர் அழகப்பன். காரணப் பெயர் என்றுதான் சொல்ல வேண்டும் அவ்வளவு கவர்ச்சிகரமான காளை. அவனது புகைப் படத்தைப் பார்த்துவிட்டு—சிந்தாமணி, பூந்தோட்டங் கண்ட பொன்வண்டின் நிலை பெற்றாள். புன்முறுவல் தேங்கியிருக்கும் இதழ்கள். அவைகளுக்கு மெருகேற்றி அழகூட்டும் அரும்பு மீசைகள். எடுப்பான மூக்கு. ஏறு நோக்கு. பேசாத அந்தப் படமே ஒரு காதல் காவியத்திற்கு முன்னுரை தீட்டும் சக்தி பெற்றதாக இருக்குமானால் நேரில் காணும் அந்த உருவம் எத்துணை காந்த வன்மை கொண்டதாகயிருக்குமோ என நினைந்து மகிழ்ந்தாள் சிந்தாமணி. இன்பம் ததும்பும் அவளது சந்தேகத்திற்கு விளக்கம் சுருக்கமாகத் தரப்பட்டது அவளது பெற்றோர்களால்!

"அழகில் அர்ச்சுனன்-அதற்கு மேல் கேட்காதே போ!" என்றார் பாரதத்தைக் கரைகண்ட அவளது தகப்பனார் சிவநேசர்.

அப்போது அருகேயிருந்த ஆண்டாள் — குறும்புக்காரியாயிற்றே; சும்மாயிருப்பாளா—துருதுருத்த வாயை மூடிக் கொண்டு!

"அழகில் மட்டுந்தானே மாமா அர்ச்சுனன்? செய்கையில் அப்படியொன்றுமில்லையே?" என்று கேட்டுவைத்தாள். நல்லவேளை நாம் கேட்கவேண்டிய கேள்வியை ஆண்டாள் கேட்டாளே என்ற களிப்பு சிந்தாமணிக்கு!

"குணத்தில் தருமனம்மா தருமன்" என்றாள் சிந்தாமணியின் தாயார் சிவகாமி.

"குதிரைப் பந்தயப் பழக்கமுண்டோ?" எனச் சடக்கெனக் கேள்வியை வீசினாள் ஆண்டாள்!

"குறும்புக் கழுதை—அவர் குதிரையில் ஏறி உட்கார்ந்தால்... அடடா...சிவாஜி மகாராஜா மாதிரி இருக்கும்."

"ஆங்...இப்படி ஏதாவது தெரிந்த உவமையாக சொல்லுங்கள்."

எனக்கூறி ஆண்டாள் சிரித்தாள். சிந்தாமணியோ சிந்தையெல்லாம் தேன்மணக்க நின்றாள் இந்த நிகழ்ச்சி மாப்பிள்ளை வீடு பார்த்து விட்டு வந்த நாளன்று நடந்தது.

சிந்தாமணிக்கும் அவள் பெற்றோருக்கும் பெங்களூர் சம்மந்தம் மிகவும் பிடித்து விட்டது. "ஏனய்யா பிடிக்காது! லக்ஷண சொரூபனும், அதோடு லக்ஷாதிபதியாம்! சிவநேசனுக்கு சரியான அதிர்ஷ்டம் அடித்ததய்யா!" இப்படி ஊரிலே பேச்சு கிளம்பிற்று. சிந்தாமணிக்கோ எழில் மயமான எதிர்காலம், கனவுகளில்—நினைவுகளில்—வந்து நின்று நர்த்தனம் புரிந்தது.

தடாகத்திலே நீராடிக் கொண்டிருக்கிறாள். அவள் நினைவுகளோ சதிராடிக் கொண்டிருக்கின்றன.

"அர்ச்சுனன் மாதிரி அழகன் என்றாரே அப்பா!...ஆகா நான் எவ்வளவு பாக்கியம் செய்தவள்! பாரதம் நடந்ததோ நடக்க வில்லையோ—பொய்யோ—புளுகோ அதைப்பற்றி யெல்லாம் எனக்குக் கவலையில்லை...அதிலே வரும் அர்ச்சுனன் என்ற கதாபாத்திரம் ஆணழகன்—அவனுடைய முதுகின் அழகைக் காண வேண்டுமென்று பார்வதி தேவியே ஆசைப் பட்டு அந்த ஆசையைத் தன் கணவன் பரமசிவனிடம்கூறினாளாம், மனைவியின் ஆசையைத் தீர்த்து வைக்க எண்ணிய பரமசிவன், அர்ச்சுனனை வலுச் சண்டைக்கு இழுத்து—இருவரும் சண்டை போடும் போது அவனது முதுகைப் பார்வதியின் பக்கம் திருப்பி, அந்த அழகை அவள் கண்டு ரசிக்குமாறு செய்தாராம். அப்படிப்பட்ட அழகனும் அர்ச்சுனன். இல்லாவிட்டால் அல்லி அவன் அடிமை யாவாளா? பவளக் கொடி படருமா அவன் மீது! சுபத்திரை சுற்றித் திரிவாளா அவனை! அந்த எழில் மன்னனுக்கு என்னுடையவரை ஒப்பிடுகிறார்களே; அவர் எதிரே நிற்பதற்கு நான் ஏற்றவள்தானா? அவருடைய தகுதிக்கும் என்னுடைய தகுதிக்கும் ஏணி வைத்தாலும் எட்டாதே! எட்டாத பழம்—கிட்டாத பொருளன்றோ எனக்குக் கிடைத்து விட்டது. அம்புலியைப் பிடித்துக் கொடம்மா என்று சிறுவயதில் அடம் செய்வேன். அம்மா, முயன்று முயன்று இப்போதுதான் அந்த அம்புலியைப் பிடித்துக் கொடுத்தது போலிருக்கிறது எனக்கு!

★

பருவமென்னும் பட்டு விரிந்து. நினைவுகள் என்னும் மல்லிகை பரப்பிய இதய மஞ்சத்திலே என்னுடையவரை மடியிலே படுக்க வைத்து அழகு பார்க்கும் அந்த எதிர்காலம்......

'விண்பெற்ற வெள்ளித் தட்டே'! என அவர் அழைக்க... 'இந்த மண் பெற்ற பேறே!' என நான் அவரை மடக்க...தோல்வியால் துவண்டு அவர் என் தோளில் சாய...அடடா அந்த எதிர்காலம்......

★

கண்பொத்தி விளையாடும் என் கை பற்றி அவர் இழுக்க...நான் தடுக்க...'தடையில்தான் வளருதடி காதல் இன்பம்! தந்திடுவாய் இதழ்த் தேன்' என்று-தருவதற்கு முன் எடுத்துக் கொள்வார்! எதிர்பார்த்தேன் நடந்ததென்று எண்ணிக்கொள்வேன் — அந்த நன்னாட்கள் வருவதற்கு ஏன்தான் தாமதமோ?

★

உல்லாசப் படகு—அதில் ஒய்யார கீதம் -கதைகளில்வரும்காதலர்கள்— காட்சிகளில் தோன்றுகின்ற இன்பபுரி வெண்புறுக்கள்—அவர்கள் எல்லாம் தோற்றோட நேரிட்டாலும் ஆச்சரியமில்லை. காதல் மகா காவியத்தின் சாகாத பாத்திரங்கள் எமைக் கண்டு நாண வேண்டும். இல்லறத்து விளக்கு இவளன்றோ—இதுவன்றோ நல்ல குடும்பம்—பல்கலைக் கழகமெனும் சொல்லுக்கு எடுத்துக்காட்டு என ஊர் முழுதும் புகழவேண்டும்...

★

சிந்தாமணி உடலை நீரிலும்—உள்ளத்தை நினைவுகளிலும் மூழ்கடித்துக் கொண்டிருந்தாள்.

இன்ப நினைவுகள் அவள் நெஞ்சத்தைத் தாக்கும்போது — நீரலைகள் அவள் மேனியில் படுவதும் அவளுக்குக் கூச்சத்தைத் தந்தது.

அவள் கற்பனை செய்துகொண்டிருந்த மணவாளனின் மென்மை மிகுந்த கரங்களோடு-அலைகளின் அணைப்பை ஒப்பிட்டுப் பார்த்து தனக்குத் தானே வெட்கப்பட்டுக் கொண்டாள்.

ரோஜாவின் மென்மை பரவியிருக்கும் அவள் உடலில்-மிருதுவான பாதங்களில் — தடாகத்து மீன் குஞ்சுகள் கடித்துக் கடித்து ஒரு புதிய பரபரப்பை உண்டு பண்ணின. உடலைக் கடித்து அன்புத் தொல்லை கொடுக்கும் அந்த மீன் குஞ்சுகளோடு போட்டி போட்டுக்கொண்டு அவளது தோழிகள் அவளது உள்ளத்தை உதடுகளால் கடித்து உபத்திரவம் செய்ய ஆரம்பித்தனர். பல் படாத

கடிதான்! ஆயினும் பருவக் கொடியன்றோ—

ஆயிரமாயிரம் உணர்ச்சிகளால் தாக்கப்பட்டு மெய்மறந்து போனுள். ஆண்டாளும், ராதாவும் மற்ற தோழிகளும் சிந்தாமணியின எதிர்கால எழிலோவியத்தை கேலித் தூரிகை கொண்டு எழுதிக் காட்டினர். மதுவை வாயிலே ஊற்றும்போது கசப்பாகத்தானிருக்கிறது. சிறிது நேரத்திற்குப் பிறகு அது தரும் இன்ப மயக்கத்தை எண்ணும்போது—ஆரம்பத்தில் ஏற்படும் கசப்பை அடியோடு வெறுத்து விடுவதில்லை. வெறும் முகச் சுளிப்போடு நின்று விடுகிருர்கள். அந்த முகச் சுளிப்புதான் தோழிகள் கிண்டல் செய்யும்போது சிந்தாமணியின் முகத்திலும் ஏற்பட்டது; இன்னும் சிறிது அவரைப் பற்றிப் பேசமாட்டார்களா? என்ற ஆவலே அவளுக்கு அதிகமாயிற்று. கசப்பை சமாளித்துக் கொண்டே இன்னும் இன்னும் என்று கள் பருகுகிறவனுக்கு ஏற்ற உதாரணமானுள் அவள்.

"சிந்தாமணியின் புருஷன் பெயர் என்ன தெரியுமாடி?" ஒருத்தி!

"பில்வமங்களா?" இன்னெருத்தி!

"போடி ... வேலையில்லை உனக்கு?" இது சிந்தாமணி.

"ஏண்டியம்மா சிந்தாமணி உன் மாமியாருக்கு சரியாகக் கண் தெரியாதாமே அரைப் பார்வைதானுமே...தட்டித் தடுமாறித்தான் நடக்க முடியுமாமே!'.

"ரொம்ப நல்லதாப் போச்சு! சிந்தாமணி பாடு கொண்டாட்டந்தான்! அல்லும் பகலும் அத்தானேடு அந்தப்புரத்தில் இருந்து கொண்டே 'அடுப்பங் கரையில் இருந்தேன் அத்தை' என்று ஏமாற்றலாம்!"

"சமையல் வேலையை யாரடி மேற்பார்வையிடுவது!"

"அப்படியானல், அத்தானை அடுப்பங்கரையிலேயே உட்கார வைத்துக் கொண்டு, அத்தை கேட்கும் போது அவர் வெளியே போயிருக்கிருர் என்று பொய் சொல்லி விட்டுப்போகிருள்!"

"ஏண்டி ஆண்டாள் சிந்தாமணி கல்யாணத்துக்கு என்னடி பரிசு கொடுப்பது?"

"நான் ஒரு பாலாடை—கெண்டி — தரப் போகிறேன்! ராதா நீ?"

"நான் தொட்டில்!"

"சுசீலா! நீ?"

"நான் ஓடாத கடிகாரம் ஒன்று தரப் போகிறேன். அப்போதுதான் காலவரையறை யின்றி காதல் டியட் முழங்கிக் கொண்டேயிருக்கும்."

"அடி சரோ! நீ என்னடி?"

"நான் கம்பராமாயணம் எளிய உரை நூல் ஒன்று தருவதாக இருக்கிறேன். கற்காததைக் கற்றுக் கொள்ள!"

"காந்தா! உன் பரிசு என்ன?"

"'டேப் ரிகார்டர்' என்று ஒன்று வந்திருக்கிறதே; அது! இரவிலே பேசுவதைப் பதிவு செய்து...காலையிலே கேட்டு... ஒருவரைப் பார்த்து ஒருவர் வெட்கப்பட நல்ல சாதனம்!"

"சரிதான்—காந்தா அனுபவத்தைக் கக்குகிருள்—கல்யாணமானவள் அல்லவா?...சரி... ஜெயா! உன்னுடைய பரிசு எது!"

"என்னுடைய பரிசா! சிந்தாமணியின் கன்னங்களுக்கு இரண்டு இரும்புக் கவசங்கள்!"

"போதும்—போதும் நிறுத்துங்கள், உங்கள் பரிசும் பவிஷும்!" என்று தண்ணீரை அள்ளி அவர்கள்மீது இறைத்தாள் சிந்தாமணி.

"ஏண்டியம்மா! இன்றைக்கு பெண்பார்க்க...யார் யார் வருகிருர்கள்?'!...என்ருள் ஆண்டாள்.

"எனக்குத் தெரியாது-தாயார் வருவார்கள்!"

"யாருடைய தாயார்?"

"அவருடைய தாயார்தான்!"

"எவருடைய தாயார்?"

சிந்தாமணியின் கன்னம் இப்போது அசல் செந்தாமரையாயிற்று! பதில் சொல்லாமல் தண்ணீரில் தலையை அமுக்கி முழ்க ஆரம்பித்தாள்.

"எப்படியடி திடீரென்று பெண் வீடு பார்க்க வருகிருர்கள்?"

"நாள்பார்த்து தந்தி கொடுப்பதாகச்சொல்லியிருந்தார்களாம். நேற்று தந்தி வந்ததாம்; இன்று வருவதாக!"

"ஆமாம் ஆமாம்; இன்னைக்கு வெள்ளிக்கிழமை — நல்ல நாள்! மாப்பிள்ளை வீடும் பெரிய வைதீகந்தான் போலிருக்கு!"

"சம்மந்திகள் இரண்டு பேருமே ...வைதீகப் பழங்கள்! மாப்பிள்ளை எப்படியோ?"

"மாப்பிள்ளையும் பெண்பார்க்க வருவாராடி சிந்தாமணி?"

பேசாமல் குளித்துக்கொண்டிருந்த சிந்தாமணியின் வாயைக் கிளறினுர்கள்.

"வந்தாலும் வரலாம்" என்று இதழசைத்தாள் அந்தப் பருவ மயில்.

அதைக் கண்டு அனைவருமே கொல்லென நகைப்புக் கொட்டினர்.

அந்த சிரிப்பொலியை ரசித்த வாறே குளத்தின் அடுத்த படித்துறைப் பக்கம் ஒரு கம்பீரமான மனிதன் பல் துலக்கியவாறு வந்து நின்ருன்.

சிரிப்பொலி திடீரென அடங்கியது. ஒருவருக் கொருவர் மெதுவாகப் பேசிக் கொண்டார்கள்,

"அடி அடி...அதோ பார் டைகர்! டைகர்! என்று ஒருவருக் கொருவர் அச்சத்தோடு சுட்டிக் காட்டினர்.

"வந்து விட்டானு...மண்டுகம்?" என்று கேலியும் ஆத்திரமும் கலந்த குரலில் கேட்டாள் சிந்தாமணி.

"நான் அப்பொழுதே சொன்னேன்—சீக்கிரம் வீட்டுக்குப் போகலாமென்று! இந்தப் பாவிப் பயல் பார்வையிலே படாமல் போகலாம்னு கேட்கிறீங்களா?" என்று அங்கலாய்த்தாள் காந்தா!

அடுத்த படித்துறையிலே நின்றவாறு அவர்களையே கண்களால் விழுங்கிக் கொண்டிருந்தான் அந்த மனிதன். டைகர் என்று அவர்கள் அழைத்ததற்கு ஏற்ப தோற்றமுடையவன்தான் அவன். அவனது முகத்திலே மிருக சுபாவத்தின் சாயல் செதுக்கப்பட்டிருந்தது. அவனது கண்ணின் விழிகளிலே பயங்கரம் பளிச்சிட்டது' அவன் பல் துலக்கும் அந்தத் தோரணை மூலமாகவே உள்ளத்தில் கொழுந்துவிட்டு உடலைத் தகித்துக் கொண்டிருக்கும் காமத் தீக்கு ஆளாகித் தவிக்கிருன் என்ற நிலை புரிந்தது. சிந்தாமணியும் தோழிகளும் அவசர அவசரமாக குளத்தை விட்டுக்கரையேற முயன்றனர். அவர்கள் பக்கம் திரும்பி நின்று எதைப்பற்றியும் கவலைப் படாமல் விலங்குப் பார்வை வீசிக் கொண்டிருந்த அவன் தோளிலே இன்னெருவன் கைவைத்து — "என்ன டைகர்! உலகத்தையே மறந்து விட்டாய் போலிருக்கே?" என்று கூச்சலிட்டான். திடுக்கிட்ட டைகர், "அடேடே! வேம்புவா? வாப்பா—வா!...பார்த்தாயா?...தேவலோகமே இந்தத் திருக்குளத்தில் இறக்குமதியானது போல் இருக்கிறது!" என்ருன் அந்தப் பெண்களின் காதில் விழும்படியாக!

"ஓகோ-அதுதான் தேவேந்திரன் இந்தப்பக்கம் விஜயமோ?" என்ருன் வேம்பு.

"டேய் வேம்பு — தெரியுமா சேதி?... சிந்தாமணிக்கு கல்யாணம் நிச்சயமாயிட்டுது!"

"அடே—அப்படியா? எப்ப?"

"இன்னம் தேதி குறிக்கிலே... இன்னைக்கு பெண் வீடு பார்க்க வர்ராங்க!"

"அப்ப...உன் கதை என்னு ஆச்சு?"

"என்கதை இனிமேல் தான் தொடரப் போகிறது. நேற்று சிவநேசனிடம் சென்று கடைசியாகப் பெண் கேட்டேன். எனக்கும் அந்தக் கிழட்டுப் பயலுக்கு முள்ள பழைய சொந்தபந்தம் எல்லாம் சொல்லி, எனக்குத்தான் சிந்தாமணி உரியவள் என்று கூறினேன், வாதாடினேன் வக்கீலைப் போல!"

"ஜட்ஜ்மென்ட் என்ன ஆச்சு?"

"சாதகமில்லை! கிழட்டுக் குரங்கு மறுத்து விட்டது கிளியைத் தருவதற்கு!"

"கிளி என்ன சொல்லுகிறது?"

"சொன்னதைச் சொல்லுகிறது கிளிப்பிள்ளை! கிழவன்—கிழவி—இருவரும் என்ன சொல்கிருர்களோ; அதையே சொல்கிறது!"

"பிறகு...என்ன செய்வதாக உத்தேசம்?"

"அவள் கல்யாணம் நடக்க முடியாமல் செய்வேன்! பெண் வீடு பார்க்க வருகிருர்களாம் பெண் வீடு!......ஒழுங்காகவா வந்து சேரப் போகிருர்கள்?"

"என்ன டைகர் சொல்றே?"

"இந்த டைகர் சமாச்சாரந்தான் உனக்குத் தெரியுமே...சிந்தாமணி எனக்குச் சொந்தமாக என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ; அவ்வளவும் எடுக்கப் போகிறேன்."

"அதான் சரி—சபாஷ் டைகர்! வேற என்ன? இந்த ஊர்ல நீ ஒரு பெரிய புள்ளி! மைனருக்கு மைனர்-பெரியவங்களுக்கு பெரியவன்! உன்னைக் கண்டா ஊரே பயப்படுது...இந்த உதவாக்கரை சிவநேசன் மாத்திரம் உன்னை மதிக்கிலேன்னு......அதை விடக் கூடாது!"

"வேம்பு!... பெங்களூரிலேயிருந்து வர்ர மாப்பிள்ளை வீட்டு மோட்டாரு...ரோட்டு மேலதான வரணும்"–

"சந்தேகமில்லாம!"

"மோட்டாரு — முழுசா வந்து சேராது பாரு!"

"அடிசக்கை! அது பிரமாதம்!"

"முதல்ல வரும் போதே... சகுனத் தடை-மாப்பிள்ளைவீட்டுக்காரன் சரியாவாங்கிகிட்டு போய்ச் சேரப் போருன்"-

"டைகர்! ஆள் எல்லாம் ரெடியா?"

"எல்லாம் தயார் — உன்னைத்தான் தேடிகிட்டு இருந்தேன்—நல்லவேளை; நீயும் ஊர்லேயிருந்து வந்துட்டே!..."

"லேடி டாக்டர் வந்தாச்சுல்லே?"

"வந்தாச்சே!... அவுங்கதானே உன்னைக் கூப்பிட்டுக்கிட்டு வரச் சொன்னுங்க...பத்து நாளா உன்னைப் பார்க்காம ஏக்கம் பிடிச்சு கிடக்கிருங்க அம்மா!"

"அப்படியா?..."

என்று இளித்துக் கொண்டே டைகர் குளத்தில் இறங்கி முகம் கழுவிக் கொண்டான்! அதற்குள் சிந்தாமணியும் மற்றவர்களும் கரையேறத் துவங்கினர்' ஒருவர் பின் ஒருவராக! கடைசியாக சிந்தாமணி, ஈரப் புடவையுடனும்...அதனுல் விளைந்த புதிய அழகுடனும்—இடையில் குடமெடுத்து படிகளில் ஏறினுள். அப்போது டைகர் வீசி யெறிந்த சிறிய கல் ஒன்று அவள் தோள் பட்டையிலே வந்து விழுந்தது!

சிந்தாமணி, திடுக்கிட்டுத்திரும்பினுள், திடீரென ஏற்பட்ட

★ தொடர்ச்சி 12-ம் பக்கம்

★ மு. கருணாநிதி ★

தீவுப் பட்டினம்...

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

நாம் அழிக்க முடியும். அதோ அந்தக் காட்டிலே நான் சிறிது நேரம் ஆபத் பாந்தவனை நினைத்து; நினைத்ததை செய்து முடிக்கும் வல்லமை பெறும் வரை எனக்கு அவகாசம் கொடு!"

— கொற்றவனுக்கு அபயம் அளித்துவிட்டு, தீட்சதர் காட்டை நோக்கப் புறப்பட்டார்.

வேதியருக்கு வேதம் ஓதுவதற்கு மட்டுமல்ல; மருத்துவமும் சிறிது தெரியும். அதுவும் விஷ மூலிகைகளின் விபரம் அவருக்கு மனப் பாடம். ஏனெனில் தஞ்சையில் வேலும் வாளும் முப்புரி நூலுக்கு அடி பணிய அந்த அஸ்திரம் கூட எத்தனை நேரங்களில் பயன்பட்டிருக்கிறது! வீராதி வீரர்களும், இரணகளச் சூரர்களும் ஆரியத்தை எதிர்த்த காரணத்துக்காக— விபூதியில் கலந்து கொடுக்கப்பட்ட விஷத்தால் எத்தனையோ தடவை பிணமாக விழுந்திருக்கிறார்களே!

தீட்சதர் காய்ந்துபோன சில விஷ மூலிகைகளை எடுத்து சிஷ்யகோடிகளின் கையிலே கொடுத்துப் பொடியாகச் சொன்னார். அவைகளை நன்றாக விபூதியுடன் கலந்து கையிலெடுத்துக் கொண்டார்.

"ரகுநாதா! மாட்டிறைச்சியை உருண்டைகளாகச் சீக்கிரம் இங்கே கொண்டுவரச் சொல்!"

—தீட்சதரின் உத்தரவு பிறந்தது தான் தாமதம்; பறந்து வந்தது மாட்டிறைச்சி!

கோவிந்த குருக்கள் பிறகு ஏதோ மந்திரத்தை ஜபித்தார்.

"சேவகா! அந்த இறைச்சி உருண்டைகளை என் கையிலே கொடு"

"சுவாமிகள் மாமிசத்தைத் தீண்டக் கூடாதே!"

"ஹஹ்ஹா! என் அப்பன் அணிந்திருப்பதே புலியைக் கொன்று அதன் சதையைக் கிழித்தெடுத்த தோல்தானே! மன்னவா; ஆதலால் தோஷமில்லை; நாளை நாம் தஞ்சாபுரி சென்றதும் ஆயிரம் பிராமணர்களுக்கு அக்காரவடிசிலுடன் பத்து நாள் போஜனத்துக்கு ஏற்பாடு செய்தால் பாபம் பறந்துவிடும்..."

—என்று சொல்லிக் கொண்டே தீட்சதர் விஷம் கலந்த திருநீற்றை மாமிசத்தோடு கலந்தார். பிறகு அவைகளை வீரர்களிடம் தமது ஆண்டவனின் பெயர் சொல்லி அகழியிலே எறியச் சொன்னார்.

அவ்வளவுதான்! மாமிச உருண்டைகளைக் கண்ட முதலைகள் அவைகளை விழுங்கத் தொடங்கின! பாவம்; தஞ்சைத் தலைவன ரகுநாதனுக்கே விஷம் எது; வேஷம் எது— என்று புரியாதபோது வாயில்லா ஜீவன்களுக்கு அது எங்கே புரியப் போகிறது!

மாமிசத்தை விழுங்கிய மறுவினாடி முதலைகள் யாவும் நீர் மட்டத்தில் மிதக்கத் தொடங்கின — பிணங்களாக!

பிறகு கேட்க வேண்டுமா? சிப்பாய்கள் அனைவரும், கையிலே இருந்த வில், வேல், வாள், ஈட்டி போன்ற வீராயுதங்களைத் தரையிலே போட்டுவிட்டு, ஆகாயத்தை நோக்கிய வண்ணம் 'சிவ சிவா!'— என்று கன்னத்தில் போட்டுக் கொண்டனர்; கோவிந்த தீட்சதரை நோக்கி சிரம் தாழ்த்தி வணங்கினர்!

வணங்கி வணங்கித்தான் அவர்கள் முதுகே வளைந்து விட்டதே; இப்போது வணங்காமுடி சோழகனையும் வணங்க வைப்பதற்காக ரகுநாதன் படைகள் தீவுப் பட்டினத்துக்குள்ளே நுழையத் துவங்கின!

சவங்களாய் மாறித் தண்ணீரில் மிதக்கும் முதலைகளின் உடலைக் கொண்டே படகுப் பாலம் அமைத்து கோட்டைக் கதவுகளைத் தட்டினர்!

தஞ்சாபுரிப் படைகள் கடலைப் போல பெருகி நிற்பன! சோழகன் கோட்டையைக் காத்திருந்ததோ முதலைகள்; அவைகளை நம்பித்தான் அவன், போர்ச்சுகீசியரிடமிருந்து கூட அதிகமான படைகளைக் கேட்காமல் தற்காப்புப் போர் புரிந்து வந்தான்.

இப்போது ஆபத்து அணுகி வருவதைக் கண்டதும் சோழகனின் கண்கள் எரிமலையாயின.

கோட்டைக் குள்ளே எதிரிகள் புகுந்து விட்டால் எந்தத் தமிழன் தான் வீட்டுக்குள்ளே இருப்பான்!

உருவிய வாளுடன், அரபி நாட்டுக் குதிரையிலேறிக் காவலன் களத்துக்கு ஏகினான்!

"ரகுநாதா! தீட்சதர் தட்டும் மேளத்துக்கெல்லாம் நெளிந்து கொடுக்கும் மண்புழுவே! என் உன்னத நோக்கமறியாது என் மீது பாய்ந்து விட்டாய்! பரவாயில்லை; உறை கழற்று உன் உடைவாளை!"

—சோழகனின் சூளுரை கேட்ட ரகுநாதன் சித்தம் சோர்ந்தான்!

அவன் இருப்பதோ யானையின் மீது; அம்பாரியில்!

சோழகன் பரியிலிருந்தே பாணம் பூட்டினான்!

ரகுநாதனால் சமாளிக்க முடியவில்லை; திணறினான்!

பக்கத்திலிருந்த தீட்சதர் இதைப் பார்த்தார். இனி அறம் வெற்றி தேடித் தராது; குறுக்கு வழியில் சென்றால்தான் குருகுலம் நிலைக்கு மென்பதை நினைத்தார்.

யானைப் பாகனுக்குக் கண் ஜாடை காட்டினார்!

அவ்வளவுதான்; மதம் கொண்டதைப்போல அந்த யானை குதிரையிலிருந்து சோழகனை — சூழ்ந்து வரும் ஈட்டிகள் அனைத்தையும் தனியொருவனாக எதிர்த்துநிற்கும் எஃகு மார்பனை — ஆகாயத்தில் தூக்கி யெறிந்தது!

தீட்சதர் சும்மாயிருப்பாரா? உடன் பக்கத்திலிருந்த வீரனின் கையிலிருந்து வாளை வாங்கிக் கொண்டு, உயரே யிருந்து கீழே விழுந்து கொண்டிருக்கும் சோழகன்பால் வீசினார். அய்யவோ! துண்டிரண்டாய்த் தரையில் வீழ்ந்தான் அந்த மறத் தமிழன்!

"அஹ் ஹ ஹா!..."

அதிர்வேட்டு போல சிரித்தார், தீட்சதர்!

"இரணியனும், இராவணனும் செய்ய முடியாத காரியத்தை செய்து முடிக்க நினைத்த சிற்றெறும்பே! இனி இந்த தீட்சதனை எதிர்க்க ஒரு துரும்பு கூட இந்தத் தமிழ் நாட்டில் அசைய முடியாதடா; அசைய முடியாது!"

மீண்டும் சிரித்தார், அந்த மகானுபாவர்! ரகுநாதனும் சேர்ந்து சிரித்தான்!

குற்றுயிரும், குலையுயிருமாய்க் கிடந்த சோழகன் பேச முயன்றான்.

"சிரிக்காதேடா, ரகுநாதா, சிரிக்காதே! மாண்டது நான்; என் படையில் பலர்; உன் படையில் சிலர். தஞ்சாபுரியின் பூபதியே! சிந்தித்துப் பார். தீட்சதரைச் சேர்ந்தவர்கள் ஒருவராவது இங்கு வீழ்ந்து கிடக்கிறார்களா? இங்கு உடைப்பெடுத்தோடும் இரத்த வெள்ளத்தில் ஒரு துளியாவது அந்த வர்க்கத்து இரத்தம் என்று கருதுகிறாயா? இல்லையடா இல்லை; ஆடுகள் நாம்; நம்மை மோதவிட்டு, வழிந்தோடும் குருதியை சோப்பையிலே வாரிக் குடிக்கிறது, அந்தக் குள்ளநரி! இனி மேலாவது, உன் சித்தம் மாறுமா? ரகுநாதா! இனிமேலாவது சிண்டு வைத்திருக்கும் அந்தக் கொடியவனின் சிலந்திப் பின்னல் உனக்குப் புரியுமா?... யோசித்துப் பாரடா; பாராண்ட இனம் பழுதையாய் ஆகியிருப்பது யாரால் என்று சிந்தித்துப் பாரடா! அது போதும் எனக்கு; உன் சிந்தனை வேலை செய்தால் என் சாவுக்குச் சரியான காரணம் கிடைத்துவிடும்! நான் சந்தோஷத்தோடு கண்களை மூடுவேன!"— சோழகன் முணகினான்!

— அதற்குமேல் அவனால் பேச முடியவில்லை; தீட்சதரின் ஆணைப் படி ரகுநாதனின் யானை சோழகனின் தலையை மிதித்துத் துவைத்தது!

'ஓ'வென்று அலறி உயிர் விட்டான் உத்தமன்; உடன் தீவுப் பட்டினத்து நெடுமதில்களும் படபட வென்று சாய்ந்து விழுந்தன!

—மாறன் எம். ஏ.,

★ திருமணம் ★



திராவிட முன்னேற்றக் கழக துணைப் பொதுச் செயலாளர், திரு. என். வி. நடராசன் அவர்கள் மகள் செல்வி இராணிக்கும், திரு. ஞாயிறு. இராசா அவர்கள் மகன் தோழர் கலைச்செழியன் அவர்களுக்கும், சென்னை வண்ணையம்பதி தியாகராயர் கல்லூரி மண்டபத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் திருமண விழா 15—4—56 காலை 9 மணியளவில் சிறப்புற நடைபெற்றது.

மணவிழாவில் திரு. பி. டி. இராசன், சின்ன அண்ணாமலை, கா. மு. ஷெரீப், ஜி. உமாபதி, மயிலை சிவமுத்து, ஈழத்தடிகள், கா. அப்பாதுரை, டி. சண்முகம் எம். எல். ஏ., ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., என். ஜீவரத்தினம், கே. கோவிந்தசாமி எம். பி., காஞ்சி கலியாணசுந்தரம், கே. ஆர். இராமசாமி, எம். ஜி. ராமச்சந்திரன், எஸ். எஸ். இராஜேந்திரன், சத்தியவாணி முத்து, அருண்மொழி, இரெ. இளம்வழுதி, சி. பி. சிற்றரசு, க. அன்பழகன், ஈ. வெ. கி. சம்பத், கே. ஏ. மதியழகன், நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பெரியார் ஈ. வெ. ராமசாமி, கோவை ஜி. டி. நாயுடு, ம. பொ. சிவஞானம், என். டி. சுந்தரவடிவேலு, சோஷலிஸ்டு ஏ. சுப்பிரமணியம், கே. ஏ. பி. விசுவநாதம், முன்னாள் அமைச்சர் எஸ். ராமநாதன், சி. எஸ். ரத்தின சபாபதி (முதலியார்), சேலம் சித்தையன், டி. கே. எஸ். சகோதரர்கள், முல்லை சத்தி, என். எஸ். இளங்கோ, இரா. சாம்பசிவம், அம்பில் தர்மலிங்கம், ப. உ. சண்முகம், கே. விநாயகம் எம். எல். ஏ; ப. கண்ணன், ரத்தினம் எம். எல். ஏ; பி. ரத்தினசாமி (பிள்ளை) எம். எல். ஏ; முல்லை. வடிவேலு, வாணிதாசன், எஸ். கருணானந்தம், திருச்சி திராவிடப் பண்ணை, மற்றும் இலங்கை, ஆதாபாத், மலேயா, பம்பாய் முதலிய இடங்களிலிருந்தும் ஏராளமான வாழ்த்துக்கள் குவிந்தன.

தோழியர் கஸ்தூரி, நாகூர் அனிபா, இசை விருந்தும், ராணி, ரமணி சகோதரிகளின் நடனமும் நடைபெற்றது.

மணமக்கள் இராணி, கலைச்செழியன், நலமனைத்தும் பெற்று வாழ்கவென இதயம் நிறைந்த அன்போடு வாழ்த்துகிறோம்.

பேனாவோவியம்

‘அரசியல் மிருகம்’!

சற்றும் எதிர்பார்க்காத இடத்திலிருந்து இதம் தரும் செய்தி வருவது பெரு வியப்பு அளிக்கக்கூடியதுதான்!

மிருகங்கள் கணவன் மனைவி, அண்ணன் தங்கை என்று முறை வகுத்துக் கொண்டு, வாழ்வு நடத்தினால்...

புலி புலனடக்கத்தின் பெருமை உணர்ந்து, புலால் உண்பதில்லை என்று சபதம் செய்து வாழ்ந்தால்...

—இவை யெல்லாம் எப்படி யிருக்குமோ அப்படித்தான் இருக்கிறது அஸ்ஸாம் மாகாணத்தின் எல்லைப்புறத்தில் வாழும் நாகர் என்னும் மலைஜாதியினர் உரிமைக் கொடியை உயர்த்திப் பிடித்திருப்பதும்!

மனதிற்குகந்தாற்போல் மலையென்றும் காடென்றும் சுற்றி அலைபவர்கள் சொந்தம் கொண்டாடுவதற்கு ஒரு நாடு கேட்கிறார்கள்!

1469-ம் ஆண்டு லண்டன் மாநகரத்து ‘ஒயிட் ஹாலில்’ மன்னரின் குரலே மகேசன் குரல் என்று கர்ஜனை புரிந்த சார்லஸ் மன்னனுடைய தலையைச் சீவி யெறிந்தார்களே; அவர்களுக்குள்ள அரசியல் எண்ணங்கள் நாகர்களின் மனதிலே அலை மோதிடக் காணுகிறோம்!

காட்டு மிராண்டிகள்தான்—அவர்களிடையே இன்று சுதந்தரம் பற்றி சுந்தரமான கருத்துக்களை வாரி வழங்கும் வால்டேர்களும், ரூசோக்களும் தோன்றியிருக்கின்றனர்.

விடுதலை பற்றி ருசிகரமான செய்திகளை வெளியிட்ட வால்டேரைச் சிறையிலடைத்தார்கள் முன்பு! சிறைக்குள்ளே அவன் சிந்தனைக் கருவூலங்களைத் தீட்டுவதற்கு அனுமதிக்கப்படவில்லை! காகிதமும் பேனாவும் அவன் கையில் சிக்கி விடக்கூடாதென்பதற்காகக் காவலர்கள் கண்ணும் கருத்துமாயிருந்தார்கள்!

அறிவு வெள்ளத்துக்கு அணைபோட முடியுமா? வால்டேர், தான் படிப்பதற்கென்று வாங்கிய புத்தக வரிகளினூடே ஈயத்துண்டு ஒன்றை உபயோகித்து இதயத்தில் இடி முழக்கம் செய்து கொண்டிருந்த எண்ணங்களைப் பாட்டு வடிவத்தில் எழுதி வைத்திருந்தானும்!

அந்த வால்டேரின் வகையைச் சேர்ந்தவர்கள் அஸ்ஸாம் எல்லையில் அணி வகுத்து நிற்கிறார்கள்!

படத்திலிருக்கும் உருவத்தைப் பாருங்கள், நாகரிகத்தின் வாசனை எங்காவது தெரிகிறதா?'

பல நூற்றாண்டுக்குப் பின்னே வாழ்ந்த மனித ஜாதியைப் படம் பிடித்துக் காட்டுகிறது அந்த உருவம், பறவைகளின் இறகைகளால் முடி செய்து வைத்திருக்கிறான். பாசி மணிகளால் அணிகலன் செய்து அந்த ஆடவன் அணிந்திருக்கிறான்.

தரையில் தொங்குமளவுக்கு நீண்டு வளர்ந்திருக்கிறது சடாமுடி!

இந்த உருவம் வேறு யாருடையதுமல்ல; நாகர் தலைவருள் ஒருவன்!

நினைத்துப் பார்க்க முடிகிறதா? இந்த இனத்தவர்தான் பஞ்சசீலப்பண்டிதருக்கு அறைகூவல் விட்டிருக்கிறார்கள்!

சென்ற மாதம் பிரகடனப்படுத்தி விட்டார்களாம், நாகநாடு சுதந்தரமடைந்துவிட்டதாக!

அதற்கான ஆக்கம் தேடவும், பிற நாடுகளின் அங்கீகாரம் பெறவும் நாகர்களின் தூது கோஷ்டியொன்று தலைவர் பிசோ தலைமையில் கராச்சி செல்லப் போவதாக செய்தி வெளியாகியிருக்கிறது!

அந்தக் கூட்டத்தை கூண்டோடு பிடித்து, கூட்டுக்குள் அடைத்துவிடத் திட்டம் போட்டு வேலை செய்து வருகிறது, இந்த அகிம்சா அரசாங்கம்!

‘புலிக்கு ஒரு குகை; பாம்புக்கொரு புற்று; பறவைக்கு ஒரு காடு; எமக்கு ஒரு நாடு’-என்று சங்கம் முழங்குகிறது, நாகமலைத் தொடரில்!

‘தாய் நாட்டுக்காக நான் தருவதற்கு என்னிடம் ஒரே ஒரு உயிர் தானே இருக்கிறது’- என்று எண்ணி ஏங்குபவர்கள் அந்தக் காட்டுமிராண்டிகளிடையே அதிகரித்து விட்டார்கள்!

அவர்களைப் பற்றிய செய்திகளைப் படித்து முடித்துவிட்டு வளர்ந்த நாகரீகத் தருவின் முற்றிய பழங்களாய்த் தொங்கும் நம்மவர்களையம் காணும்போது அப்பப்பா! என்னென்ன கருதிடத் தோணுகிறது!

இங்கே உழைக்கிறார்கள், மாடுபோல; உண்கிறார்கள், காண்டா மிருகம்போல! உறங்குகிறார்கள், ‘கும்பகர்ணன்’ போல!

அங்கே சிந்திக்கிறார்கள்; சிரம் தரவும் சித்தமாயிருக்கிறார்கள், நாட்டுக்காக; அவர்கள் வளர்ந்து நடமாடிய மண்ணுக்காக!

அரிஸ்டாட்டில் மனிதனை ‘அரசியல் (தெரிந்த) மிருகம்’ என்று குறிப்பிட்டான்!

ஆமாம்; மனிசனுக்கும் மிருகத்துக்கும் உள்ள வித்யாசங்களிலே முக்கியமானது, மனிதனுக்கு அரசியல் உணர்வு உண்டு; மற்றவைகளுக்கு அது இல்லை!

தென்னகத்தைப் பாருங்கள்; அரசியல் உணர்வற்ற மரக்கட்டைகளாய் மனித மிருகங்கள் அலைவதைக் காணுகிறோம். இராமன் ஆண்டால் என்ன; இராவணன் ஆண்டால் என்ன என்று சோம்பேறிப் பேச்சு பேசிவிட்டு பொழுதைக் கழிக்கும் சோற்றாலடித்த பிண்டங்கள் அல்லவோ பெருவாரியாக வாழ்கின்றன, இந்த நாட்டில்!

அவர்கள் எல்லோரும் திரும்பிப்பார்க்க வேண்டும் நாகர் மலைத் தொடரை!

அவர்கள் வாழும்பகுதியை, சுதந்தரநாடு என்று பாரத அரசாட்சியைக் கேட்காமலேயே பறை முழக்கிவிட்டார்கள்.

அந்தக் காட்டுமிராண்டிகள் தட்டும் விடுதலை முரசும் விவேக சிந்தாமணிகள் என்று தம்மை நினைத்துக்கொண்டு பித்தம் தலைக்கேறப் பெற்றுத் திரியும் தறுக்கர்களின் செவிப் பறையைக் கிழித்தெறியட்டும்!

★

மே தின விழாப் பொதுக்கூட்டம்

★

சென்னை
திருவல்லிக்கேணி கடற்கரையில்
1-5-56 செவ்வாய்
மாலை 6 மணிக்கு
தோழர் இளம்பரிதி தலைமையில்
பொதுச்செயலாளர்,
இரா. நெடுஞ்செழியன் பேசுவார்.

★

[மாபெரும் ஊர்வலம்பிற்பகல் 2 மணிக்கு அறிவகத்திலிருந்து புறப்பட்டு கடற்கரையை வந்தடையும்.]

சே. மா. கழகம்.

பொதுமக்களுக்கும், வியாபாரிகளுக்கும் ஓர் அரிய வாய்ப்பு!

இதன் மூலம் எல்லா ஊர்களிலுமுள்ள வியாபாரிகளும் அதிகப் பொருள் செலவும் கால நீடிப்பும் இல்லாமல் சுலபமாகத் தங்கள் வியாபாரத்தை விருத்தி செய்து கொள்ளலாம்.

வியாபாரிகளுக்குச் செலவில் சிக்கனமும், போக்குவரத்துச் செலவுகள்—காலதாமதம் ஆகியவைகள் குறைவதுடன் தாமதமன்னியில் விவரங்களைத் தெரிந்து கொள்ளுவதற்கும் பெரும் அனுகூலமாயிருக்கும் ஸ்தாபனம் ‘மெட்ரூஸ் க்ளீம் அண்டு சர்வீஸ் சின்டிகேட்.’

இவ்வரிய சந்தர்ப்பத்தை, அனைவரும் எங்கள் ஸ்தாபனத்தின் மூலம் பயன்படுத்திக் கொள்ளும்படி கோருகிறோம்.

சிதம்பரம் ஜெயராமன், தலைவர்.

கே. சேஷாத்திரி, எல். டி. சி., எஸ். ஏ. சங்கரலிங்கம்,
பங்காளிகள்.

விபரங்கட்கு: மதரூஸ் க்ளீம் அண்டு சர்வீஸ் ஸிடிகேட்.
த. பெ. நெ. 1004, 10-7, என். ஆர். ரோட், சென்னை-17.

: : : தி. மு. க. 2-வது : : :

மாநில மாநாடு

திருச்சி.

★

மே, 17, 18, 19, 20 தேதிகளில்

பெரிய இரயில்வே நிலையத்திற்கு அருகிலுள்ள, பந்தயத் திடலில் அமைந்துள்ள

'வள்ளுவர் நகரில்'

நடைபெறும்

★

தலைவர்: இரா. நெடுஞ்செழியன்

திறப்பாளர்: ஜி. பி. சோமசுந்தரம்

வரவேற்புக் குழுத் தலைவர்: ஏ. பி. தருமலிங்கம்

★

மாநாட்டில் கலை விருந்து அளிப்போர்

என். எஸ். கிருஷ்ணன்	○	கே. ஆர். இராமசாமி
எம். ஜி. இராமச்சந்திரன்	●	நாகூர் அனிபா
எஸ். எஸ். இராஜேந்திரன்		ஜி. கஸ்தூரி
டி. வி. நாராயணசாமி	○	பி. எஸ். செல்வா

திருவாவடுதுறை டி. என். இராசரத்தினம்

★

கருத்து விருந்தளிப்போர் :

அறிஞர், அண்ணா

என். வி. நடராசன்	...	ஈ. வெ. கி. சம்பத்
கே. ஏ. மதியழகன்	...	மு. கருணாநிதி
க. அன்பழகன்	...	சி. பி சிற்றரசு
கண்ணதாசன்	...	சத்தியவாணிமுத்து
ஏ. வி. பி. ஆசைத்தம்பி	...	என். எஸ்- இளங்கோ
கி. மனோகரன்	...	கா. அப்பாத்துரை
காஞ்சி கல்யாணசுந்தரம்	...	அரங்கண்ணல்
அருண்மொழி	...	ப உ. சண்முகம்
தில்லை வில்லாளன்	...	அ. பொன்னம்பலனார்
கே. கே. நீலமேகம்	...	எம். பி. சுப்பிரமணியம்
ஏ. கோவிந்தசாமி	...	இரா. சு. தங்கப்பழம்
எம். எஸ். இராமசாமி	...	அலமேலு அப்பாத்துரை

★

மாநாடுக் கட்டணம்

4 நாட்களுக்கும் சேர்த்து

	ஆண்	பெண்
முதல் பிரிவு	10 0 0	10 0 0
2-வது பிரிவு	5 0 0	2 8 0
3-வது பிரிவு	3 0 0	1 8 0

தனித்தனி ஒவ்வொரு நாளும்

	ஆண்	பெண்
முதல் பிரிவு	3 0 0	3 0 0
2-ம் பிரிவு	1 8 0	0 12 0
3-ம் பிரிவு	1 0 0	0 8 0

தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிக்கட்டணம் (நுழைவு உள்பட) 5 0 0

பொதுக்குழு உறுப்பினரல்லாதார், வரவேற்புக் குழு கட்டணம் 25 0 0

மாநாட்டு விளம்பரக் குழு.

பிறைவானம்......

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

"அய்யா! அந்தச் சிறுவன் இங்கு வந்தானா?..." என்று கேட்டார் அவசர அவசரமாக!

"வந்தான்..."-மெதுவாக இழுத்தார் முருக பக்தர்.

"ஐயா! தயவுசெய்து அவனை என்னிடம் கொடுத்து விடுங்கள். என்ன அன்பாக வைத்திருந்தேன்; ஏனோ இங்கு வந்துவிட்டானே!"

"முடியாது! அவன் வரமாட்டான்!..."

"ஐயா! உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் கேளுங்கள். ஆயிரம் ரூபாய் தருகிறேன; தயவு செய்து அவனைத் தந்துவிடுங்கள்!"

ஒரு கத்தை ரூபாய் நோட்டுகளை நீட்டினார் அவர். முருக பக்தரின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. ஆனாலும் என்ன செய்ய முடியும்? பிணத்திற்கு பணம் தரமாட்டாரே அந்த ஆசாமி!

முருக பக்தர், "அவன் வேறு எங்கேயோ போய்விட்டான்" என்று சொல்லிவிட்டு நடக்க ஆரம்பித்தார். கார் திரும்பிச் சென்றது.

முருக பக்தருக்கு தூக்கமே வரவில்லை. எதிர்பாராது வந்த பணத்தை இழந்து விட்டோமே—என்ற ஏக்கம் அவருக்கு!

★

மறுநாள்-பொழுது விடிந்தது.

ஊர்க் கடைத்தெருவிலே நின்று கொண்டிருந்தார் முருக பக்தர். எதிரே அந்த நொண்டிச் சிறுவனின் உயிரற்ற உடல்!

"ஐயா! ஒரே மகன்-அநியாயமா செத்துட்டான். அவனை அடக்கம் செய்ய வேண்டும்-ஏதாவது சில்லறை போடுங்க!" — என்றார், அழுது கொண்டே!

ஏதோ கொஞ்சம் கிடைத்தது! எடுத்துக் கொண்டார்.

"...ம்...ஆயிர ரூபாய் அநியாயமாய் போய் விட்டது நேற்று. பெரிய நஷ்டம்தான் அது! போகட்டும்! இதோ கிடைத்திருக்கிறதே கொஞ்சம்; கிடைத்தவரை லாபம்தான்!" என்று முணுமுணுத்தார். நழுவிவிட்டார்.

★

சிறுவனின் பிணத்தை முனிசிபாலிட்டியார் இலவசமாக அடக்கம் செய்துவிட்டனர்.

—சொர்ணம்.

★

'முரசொலி'

இலங்கைத் தோழர்களுக்கு:

ஆண்டு சந்தா 6-0-0
6-மாத சந்தா 3-8-0

இலங்கை நேயர்களிடமிருந்து மணியார்டர் மூலம் சந்தா தொகை பெற்றுக் கொள்ள இயலும்.

வெளிநாடு

ஆண்டு சந்தா 7-0-0
ஆறுமாத சந்தா 4-0-0

மலேயா நேயர்கள், சந்தா தொகைக்கு 'கிராஸ்' செய்த பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் அனுப்ப வேண்டுகிறோம்.

நள்ளிரவு—தெருக் கோடியிலிருந்த சத்திரம் பயங்கரமான இருளில் மூழ்கிக் கிடந்தது.

சத்திரத்துத் திண்ணையில் உருண்டு கிடந்த உருவங்கள் ஏதோ பேசிக்கொண்டிருந்தன. பகல் இரவு, வெயில்-மழை, இவைகளைப் பற்றியெல்லாம் கவலைப்படாதவர்கள் அவர்கள். ஆமாம்; பரதேசிகள்!

"என்ன 'முருக சாமி', என்ன வாயை மூடிக்கிட்டு படுத்துகிடக்கே ...'' — மௌனமாகக் கிடந்த ஒரு பரதேசியைக் கிளப்பிவிட்டான் ஒருவன்.

"பின்னே என்னப்பா! பேசுவதற்கு உடம்பிலே தெம்பு வேண்டாமா?...ஐயோ, முருகா!" என்றார் அந்த 'முருக'ப் பரதேசி.

"ஏனும்...ஒண்ணும் கெடக்கிலியோ?"

"எப்படிக் கிடைக்கும்? போற இடமெல்லாம் அந்தப் புதுப் பையனும் கூட வந்து நிற்கிறான். பிச்சைப் போடறவங்க அந்தப் பொடியனைப் பார்ப்பாங்களா? தடிமாடாட்டமா நிக்கிற நம்மை கவனிப்பாங்களா?...நீளுற கையெல்லாம் அவன் பக்கமே திரும்பிடுது!..உம்..முருகா! இதுக்கு ஒரு வழியில்லியா?"

"இங்க மட்டும் என்ன சாமி, வாழுது! நான் காலணாவைக் கண்டு நாலு நாளாகுது! அந்த எமப் பயல் என்னை சித்திரவதைதான் செய்யறான். வழக்கமாக என் முகத்தைக் கண்டதும் காலணாவைப் போடுறவங்கெல்லாம் அவன்பக்கம்திரும்பிட்டாங்க...பாவி, அவன் உருப்படுவானா?...'' — முதல்வன் 'முகாரி' பாடினான்.

அப்போது...

"கழுதை!...எங்கிருந்து வந்ததோ, நம்மை எல்லாம் சாகடிக்க ...'' — என்று உரக்கக் கத்திக்கொண்டே ஒரு பரதேசி அங்கே வந்தான்.

"என்ன, என்ன நடந்தது?"

ஏககாலத்தில் இரண்டு குரல்களும் கேட்டன.

"என்ன நடந்ததா? இன்னிக்கு சினிமாக் கொட்டகையிலே என்ன வசூல் தெரியுமா?"

"ஆயிரமாயிரமா இருக்கும்!"

"அட, அதைச் சொல்லலே நான்! ...அந்தப் பொடிப் பயலுக்கு! 'க்யூ' விலே பிச்சைக் கேட்டே ஒரு ரூபாய் சம்பாரிச்சுட்டான்...எனக்கு தம்படி கிடைக்கலே!"—பாவம், ஏமாற்றம் அந்தப் பரதேசிக்கு அழுகையை வரவழைத்தது!

இருளுக்கு மத்தியிலே - சத்திரத்துத் திண்ணையிலே - இப்படிப் பலருடைய எதிர்ப்புக்கு ஆளாகியிருக்கும் அந்தப் புதியவன்தான் யார்?

அவன் சிறுவன். பெற்றவர்களை இழந்தவன். உலகம் இப்படிப்பட்டதென்று அறியாதவன்; ஆனாலும் சாப்பிட வேண்டுமே! கேட்குமா பாழும் வயிறு! என்ன செய்வதென்று யோசித்தான். அவனுக்குத் தெரிந்த ஒரே தொழில் பிச்சை எடுப்பதுதான். அதற்கு வேண்டிய மூலதனம் அழுகை-கண்ணீர்; இவை அவனிடம் இயற்கையிலேயே இருந்தன. ஆனால் அந்தத் தொழிலிலேயும்தான் எத்தனை போட்டி! அவனது பச்சிளம் வயது - பரிதாபக் கோலம்-பார்ப்போரை மனதிரங்க வைத்தது. அதன் பலனே பரம்பரைப் பரதேசிகளுக்கு பெரும் பாதகமாக அல்லவா முடிந்துவிட்டது!

அதன் விளைவுதான், அதோ, 'விட்டேனு பார்!' என்று கோபத்துடன் உலவிக் கொண்டிருக்கும் 'முருகப் பரதேசி'யின் உள்ளத்தில் புயலைக் கிளப்பிவிட்டு விட்டது.

"வரட்டும் அந்தக் கழுதை! ஒரே அறை! ஒண்ணு சாகணும்; அல்லது ஓடணும்!... என்னப்பன் முருகன் இனியும் சோதிக்கமாட்டான்...'' என்று அவர் முடிக்கவில்லை...

அதே கணம்...'கிரீச்' என்ற ஒரு பயங்கர சத்தம்!

அதைத் தொடர்ந்து 'ஐயோ' என்ற ஒரு பிஞ்சுத் தொண்டையின் கோர அலறல்!

பரதேசிகள் திடுக்கிட்டார்கள். சாலையோர விளக்கடியில் ஒரு பெரிய மோட்டார் கார் நிற்பதைக் கண்டார்கள். ஓடினார்கள்.

காரின் முன் சக்கரத்துக்கு தனது இடதுகாலை பலி கொடுத்துவிட்டு கதறிக் கொண்டு கிடந்தான் அந்த பிரச்னைக்குரிய பிச்சைக்கார சிறுவன்.

பயங்கரக் காட்சி—பெரும் அதிர்ச்சி — உள்ளமுருக்கும் சம்பவம் — முருகப் பரதேசியோ உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார். ஆனாலும் 'ஐயோ' என்று அலறினார். அது பாவனை-வேஷம்-பகிரங்க மோசடி!

காரிலிருந்து அவசர அவசரமாக இறங்கினார் ஒரு பெரிய மனிதர். "இது யாருடைய பிள்ளை?" என்று கேட்டார்.

பரதேசிகள் வாயைத் திறக்கவில்லை.

அந்த மனிதர் உடனே பையனைத் தூக்கினார். காரில் வைத்துக்கொண்டார். கார் பறந்தது.

"அப்பாடா! தொல்லை விட்டது!" என்று சொல்லிக் கொண்டே சிரித்துச் சென்றனர் பரதேசிகள்!

முருகப் பரதேசி மட்டும் அந்த இடத்திலேயே நின்றார்.

"என்ன இருந்தாலும் நம்ப முருகசாமிக்கு இளகிய மனம்! அதோ, பாருங்கள். கார் போகும் திசையையே பார்த்து நிற்கிறார்" என்றான் ஒருவன்.

ஆனால், அவர்களுக்கென்ன தெரியும், காரில் அடிபட்ட சிறுவனின் கையிலிருந்து கீழே விழுந்து கிடந்த சில்லரையை யாருமறியாமல் எடுத்துக் கொள்ள காத்து நிற்கிறார் முருகப் பரதேசி என்பது!

★

ஒரு மாதம் சென்றது.

பிச்சைக்கார சிறுவன் சத்திரத்துப் பக்கம் வரவேயில்லை. பிச்சைக்காரர்களுக்கு மகிழ்ச்சி! இப்போதெல்லாம் அவர்களது தொழிலுக்கு இடைஞ்சலே கிடையாதல்லவா!

ஒரு நாள்...

சத்திரத்துத் திண்ணையிலே புரண்டு கொண்டிருந்த 'முருகசாமி'யின் அருகில் ஓடி வந்தான் ஒரு பரதேசி.

"ஏன்? என்னப்பா சமாசாரம்?" என்று கேட்டார் அவர்.

"நம்ப பிச்சைக்காரப் பயல் இல்லே, அவனைப் பார்த்தேன் நான்!" என்றான் ஓடிவந்தவன்.

"என்ன, அவன் மறுபடியும் வர்றானா?"—கோபத்துடன் கேட்டார் அவர். அவருக்குப் பயம், எங்கே அவன் மீண்டும் வந்து, பிழைப்பில் மண்ணைப் போட்டு விடுவானோ என்று.

"இங்கே வரலே சாமி! முந்தி அடிபட்டானே, அதே காரில் ஜாம் ஜாமுன்னு போயிக்கிட்டிருக்கான்... அவனை அந்த மனுஷனே வளக்கிறானும்..."

"போகட்டுமே, நமக்கு என்ன வந்தது? அவன் திரும்பி இங்க வராம இருந்தா போதும்!" என்று சொல்லிவிட்டு கண்களை மூடினார் அவர். ஆனாலும் அவரது மனதிலே, அவன் திரும்பி வந்துவிட்டால் என்ன செய்வது என்ற அச்சம் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தது.

★

ஒரு வாரத்திற்குப் பிறகு... ஒரு நாள்!

உண்ட களைப்பு—"முருகா!" என்று வாய்விட்டு சொல்லியபடி, சத்திரத்துத் திண்ணையிலே சாய்ந்து கொண்டிருந்தார் அந்த 'முருகசாமி'.

நல்ல நிலா! ஏதோ 'டக், டக்' கென்ற சப்தம் கேட்டுத் திரும்பினார் அவர். மறுகணம் 'ஐயோ' என்று பெருமூச்சு விட்டார். "அடப் பாவிப் பயலே! மறுபடியும் வந்துட்டியா?" என்று கத்தினார். அப்பப்பா! அவரது குரலிலேதான் எத்தனை வேகம்—கோபம்!

அந்தப் பையன்தான் வந்து கொண்டிருந்தான், 'மூன்று கால்' பெற்றவனாக. ஆமாம்; அவனது வலது காலைக் காணோம்; பதிலாக இரண்டு ஊன்றுகோல்கள் இருந்தன. தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்த அவன் சத்திரத்துத் திண்ணையில் 'தொப்'பென்று உட்கார்ந்தான்.

"ஏண்டா ராஸ்கல்! எங்கேடா வந்தே?"

உறுமினார் முருக பக்தர்.

"எனக்கு அந்த பங்களா பிடிக்கவேயில்லே, மோட்டார் காரும் கட்டுப்பாடுகளும் எனக்கு வேம்பாக இருந்தது. அதான் வந்துட்டேன். இந்த பாருங்க ஒரே சுரம்!"

அவனுக்கு உண்மையிலேயே கடுமையான ஜுரம் அடித்துக் கொண்டிருந்தது. உடல் நடுங்கியது.

"அதுக்காக மறுபடியும் பிச்சை எடுக்க வந்தியா?"

"ஆமாம்! அதுதான் எனக்குப் பிடிக்குது!"

இதைக் கேட்டதும் 'சுருக்' கென்றது அவருக்கு! மறுகணம், 'நாளை முதல் நான் பட்டினிதான்' என்று மனதிற்குள் பேசிக் கொண்டார். என்ன செய்வது என்று யோசித்தார்.

எதிரே உட்கார்ந்திருந்த அந்த நொண்டிச் சிறுவன், அவருக்கு பயங்கரமான 'ஜென்ம' விரோதியாகத் தோன்றிக் கொண்டிருந்தான்.

"ஐயா பசிக்குது..." — அவன் முணு முணுத்தான்.

"சாவேன், எனக் கென்ன வந்தது?" என்று கத்தியவர், என்னவோ எண்ணினார். "அதோ, மரத்தடியிலே கலயம் வச்சிருக்கேன். ஏதாவது இருந்தா சாப்பிடு" என்றார். மெதுவாக சிரித்தார்.

பையன் ஊன்றுகோலுடன் எழுந்தான். தடுமாறியபடியே நடந்தான்.

முருக பக்தர் சுற்று முற்றும் உற்றுப் பார்த்தார். அந்தப் பார்வையில்தான் எத்தனை பயங்கரம்—செந்நிறம்!

பையன் நடந்து கொண்டிருந்தான்.

முருகபக்தர் அடிமேல் அடி வைத்துப் பின்னால் நடந்தார், பூனை போல.

சுற்று வட்டாரத்தில் ஒருவரையும் காணோம்! முருக பக்தரின் உடல் நடுங்கியது. இருந்தாலும் அவர் பையனை நெருங்கி விட்டார்.

கலயத்தை நோக்கி ஆவலுடன் தாவினான் சிறுவன்.

மறுகணம் முருக பக்தரின் முரட்டுக் கரங்கள் அவனது கழுத்தைப் பற்றின.

"ஐயோ!" என்ற அலறல் தேய்ந்து ஒலித்தது!

அந்த அக்கிரமத்தை ஒரே ஒருவன் மட்டும் பார்த்துக் கொண்டு பேசாம லிருந்தான். அவன்தான் எதுவும் செய்ய முடியாத சந்திரன்!

★

அவரையும் மீறி தட தடவென்று ஆடிக்கொண்டிருந்த உடலுடன் சத்திரத்துத் திண்ணைக்கு வந்து சேர்ந்தார் முருகபக்தர்!

மறுகணம்...

பளிச்சென்று ஒளி வீசிக்கொண்டு அங்கு வந்து நின்றது ஒரு மோட்டார்கார்! அன்று அந்தச்சிறுவனின் மேல் மோதிய, அதே கார்தான்!

உள்ளே இருந்து அந்த மனிதர் இறங்கினார், படபடப்புடன், துடிதுடிப்புடன்.

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

கடைசிப் பக்கம்

'எழுத்தாணி'

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்,
(★) எல்.எஸ்.கே. ரங்கமூர்த்தி,
(மே.பா.) எல். கிருஷ்ணமூர்த்தி
313. யாதவர் வீதி,
கோவை.

கோவி. செயராமன்; பூண்டி லோயா.

(?) அமைச்சர் சுப்பிரமணியம் தமிழரா?

இல்லை. இல்லை — முக்காலும் இல்லை. அவர் ஒரு இந்திய ராம்!

ஐ. வள்ளி நாயகம்; ஆலடிப்பட்டி

(?) பண்டித ஜவகரைப் போல என் குழந்தை வளர வேண்டுமானல் என்ன செய்ய வேண்டும்?

மிகவும் ஜாக்கிரதையாக உங்கள் குழந்தையின் நாக்கிலுள்ள நரம்புகளை எடுத்துவிட முயலுங்கள்.

கருணாதாசன்; தஞ்சை.

(?) சுப்ரமணியம் துரத்தப்பட வேண்டியவரா?

பிறகென்ன—தமிழ்த் துரோகிகள் துதிக்கப்பட வேண்டியவர்களா?

மதுரைத் தம்பி; மதுரை.

(?) காங்கிரசுக்கு அடுத்த நல்ல அரசியல்கட்சி கம்யூனிஸ்டுகள்தான் என்று பக்தவத்சலம் பேசினாரமே...?

ஆமாம்... காங்கிரஸ் கம்யூனிஸ்டு விவாகத்துக்கு நிச்சயார்த்தம் எல்லாம் ஆகி விட்டதல்லவா?

வேல்சாமி; திருச்சி மலைக்கோட்டை.

(?) நம்மையெல்லாம் தேசத் துரோகிகள்—ஏகாதிபத்ய தாசர்கள் என்கிறாரே சுப்ரமணியம்—உண்மைதானா?

பாவம்; அவரது பக்கத்திலேயிருக்கிற மாணிக்கவேலர், ராமசாமி படையாச்சி—ராஜா சர் முத்தையா செட்டியார்—டி. டி. கிருஷ்ணமாச்சாரி முதலியவர்களை மறந்துவிட்டுப் பேசியிருப்பார்!

ஏ. பி. நஞ்சய்யன்; ஆலாம்பாளையம்.

(?) எல்லாக் கட்சி மாநாடுகளிலும் நடப்பதைவிட திருச்சியில் நடக்கும் மாநாட்டில் இருக்கும் புதுமை என்ன?

தாயக விடுதலை முரசு தி. மு. கழக மாநாட்டில்தான் ஒலிக்கும்!

சாமிநாதன்; திருமங்கலக் கோட்டை—மேல காலனி.

(?) செல்லாக் காசாக ஆகிக் கொண்டு வருபவர் யார்?

சட்டசபையில் இருக்கும் சில ஓட்டைக் காலணுக்கள்!

(★) எல். எஸ். கே. ரங்கமூர்த்தி; கோவை.

(?) ஆண்டவனுக்கும் ஆண்டு கொண்டிருப்பவனுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

ஆண்டவன் உடல் முழுதும் கல்! ஆண்டு கொண்டிருப்பவனுக்கு இருதயம் மட்டுமே கல்!

இளமணி; காட்டுப்பாடி. (என்.ஏ.)

(?) 22—4—'56 'திராவிடநாடு' இதழில் அண்ணா அவர்கள் தம்பிமார்களின் சொற்பொழிவின் தன்மை குறித்து எழுதியுள்ளார். அவரது சொற்பொழிவு எத்தன்மை வாய்ந்தது?

அணுவைத் துளைத்து, ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்.

ர. எல்லப்பன்; செவ்வா பேட்டை—சேலம்.

(?) முதலமைச்சர் காமராசர் வெறுப்பு விருப்பற்ற துறவியாமே; உண்மையா?

உண்மைதான்! மந்திரி பதவி மீது வெறுப்பு கிடையாது — தமிழ் மக்கள் மீது விருப்பம் கிடையாது!

வெள்ளிக்கிழமை...

★ 7-ம் பக்கத் தொடர்ச்சி

அதிர்ச்சியில் கால் தவறியது. படியில் படிந்திருந்த பாசியின் மீது அவள் பாதம் பதிந்தது. சிந்தாமணி அதைச் சமாளிக்க முடியவில்லை. வழுக்கிவிழுந்தாள். ஐந்தாறு படிகளில் உருண்டு, தண்ணீரில் போய் குப்புற விழுந்தாள். அதற்குள் தோழிகள் அலறிக் கொண்டு ஓடிப்போய் சிந்தாமணியைத் தூக்கினர். கைகரும் வேம்பும் இருந்த இடம் தெரியவில்லை. மறைந்து விட்டார்கள். சிந்தாமணிக்கு நெஞ்சிலே மிகப் பலமான அடி பட்டு விட்டது. அவள் பிரக்ஞை யிழந்தாள். பேச்சில்லை. மூச்சு மட்டும் இழைந்தது. தோழிகள் அவளைத் தூக்கிக் கொண்டு வீடு நோக்கி நடந்தனர். சிவநேசரும் சிவகாமியும் அலறியடித்துக் கொண்டு அழுது புலம்பினர் அவசர அவசரமாக அவளை டாக்டர் வீட்டுக்குக் கொண்டு போனால்தான் பிழைப்பாள் என்றனர் தெருவினர். சிவகாமி, "அய்யோ-நல்ல நாளும் அதுவுமா-பெண் வீடு பாக்க வரா வேளையிலே - இப்படி ஆச்சே!" என்று கதறினாள். அழுவதற்கு நேரமா இது—என அதட்டினர் ஊரார்.

சிந்தாமணி, லேடி டாக்டர் ஆனந்தியின் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டாள். அவள் பிழைப்பாளா என்ற சந்தேகம் பலமாக எழுந்துவிட்டது சிவநேசருக்கும்—சிவகாமிக்கும்!

(தொடரும்)

திண்டுக்கல்

29—4—56. ஞாயிறு மாலை 7 மணிக்கு வ. உ. சி. திடலில் தோழர் ஏ. சுப்பையா அவர்கள் தலைமையில் தோழியர் அருண்மொழி, தோழர் என். முத்து ஆகியோர் பேசுவர்.

கட்டிமேடு

29—4—56 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு கடை வீதியில் தோழர் ப. வீராசாமி அவர்கள் தலைமையில் தோழியர் சத்தியவாணி முத்து, தோழர் சுல்தான் ஆகியோர் பேசுவர்.

சென்னை

29—4—56 ஞாயிறு மாலை 6 மணிக்கு வால் டாக்ஸ் ரோடு மைதானத்தில் தோழர் சி. பஞ்சாட்சரம் அவர்கள் தலைமையில் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் அரங்கண்ணல் கோ. செங்குட்டுவன் ஆகியோர் பேசுவர்.

கீரனூர்

30-4-56 திங்களன்று பொதுச் சாவடி மைதானத்தில் தி.மு.க. துவக்க விழாவில் தோழர் சுவாமி சிவநேசம் அவர்கள் தலைமையில் தோழர்கள் க. அன்பழகன், பழனி, தமிழரசு ஆகியோர் பேசுவர்.

குடியாத்தம்

1—5—56 செவ்வாய் மாலை 6 மணிக்கு ஆற்றுத் திடலில் மே தின விழாவில் தோழர் கு. சி. பொன்னுசாமி அவர்கள் தலைமையில் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன்—அவர்கள் "மே தினத்தின் நலம்" என்னும் பொருள் பற்றி பேசுவார்.

பந்தநல்லூர்

4—5—56 வெள்ளி மாலை 5 மணிக்கு பட்டி மைதானத்தில் நடைபெறும் தி.மு.க. ஆண்டு விழாவில் தோழர் பி. ஏ. லிங்கன் அவர்கள் தலைமையில் தோழர்கள் கே. ஏ. மதியழகன், பொ. தருமன் ம. கோ. மணி ஆகியோர் பேசுவர்.

திருமணம்

22-4-56 அன்று ராப்ராய் தி. மு. க. தோழர் சிங்காரவேலு அவர்களின் தங்கை தோழியர் பழனியம்மாளுக்கும் ஆனைமலை தோழர் நடராஜனுக்கும் சிறப்புற திருமணம் நடைபெற்றது. செய்தி அறிந்து மகிழ்கிறோம்.

மாநாட்டுச் செய்திகள்

மாநாட்டுக்குத் தீர்மானம் அனுப்புவோர் கவனிக்க:

★★★ திருச்சியில் நடைபெறும் மாநில மாநாட்டுக்கு தீர்மானம் அனுப்புவோர் 10-5-56-க்குள் மாநாட்டு அலுவலகத்துக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

★

மாநில மாநாட்டில் கிளைக் கழக கொடிகள்:

★★★ திருச்சியில் நடைபெறும் 2-வது தி. மு. க. மாநில மாநாட்டுக்கு வரும் கிளைக் கழகத் தோழர்கள் தங்கள் கிளைக் கழகத்தின் பெயர் பொறித்த கொடிகள் கொண்டுவர வேண்டும். கொடியின் அளவு 3 அடி நீளம் 2 அடி அகலம் இருக்க வேண்டும். கொடியின் அளவை கூட்டவோ, குறைக்கவோ கூடாது.

★

பெண் தொண்டர்களுக்கு அறிவிப்பு:

★★★ திருச்சியில் நடைபெறும் மாநில மாநாட்டில் தொண்டர்களாக பணியாற்ற விருப்பமுள்ளவர்கள், தங்களது முகவரியை முன்கூட்டியே மாநாட்டு அலுவலகத்துக்கு அறிவிக்க வேண்டும். அவர்கள் வரும்போது கருப்பு சேலையும் சிகப்பு ஜாக்கெட்டும் கொண்டுவர வேண்டும்.

"குமுதம்"

குமுதம் இதழில் "திராவிடஸ்தான் வேண்டுமா—வேண்டாமா?" என்ற கட்டுரைப் போட்டிக்கு நானும் ஒரு நீதிபதியாக இருப்பதற்கு தலைமை நிலையம் இசைவு தராத காரணத்தால் அந்த நீதிபதிக் குழுவில் நான் அங்கம் வகிக்கவில்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மு. கருணாநிதி.

— வெங்கிடங்கால் —

அறிவகம் கட்டிட நிதிக்காக

நாகை, ஸ்டார் டாக்கீஸில்

சிறப்புக் கூட்டம்

6-5-56 காலை 9 மணிக்கு

அறிஞர் அண்ணா

("இமயத்தில் நாம்")

அரங்கண்ணல்

ஆகியோர் பேசுவர்.

நன்கொடை ரு. 1, அணா 8.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6